பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை (24.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 271



நல்லூர் கந்தசுவாமி கோயில் கார்த்திகைத் திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

பச்சை மயில் வாகனத்தில் முத்துக்குமாரசுவாமி வள்ளி, தெய்வானை சமேதரராக பூச்சப்பரத்தில் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் காட்சி அளிக்கும் போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்: நேசன்)

# நேற்றைய தேர்தல் களநிலைமை குறித்து முரண்பட்ட தகவல்கள்

கொழும்பு, ஒகஸ்ட் 24

நேற்று நடைபெற்ற வடமத்திய மாகாண மற்றும் சம்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் குறித்து இரு வேறுபட்ட - முரண்பாடான - தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

எதிர்பார்க்கப்பட்டவாறு பெரிய அளவில் வன்செயல்கள் இடம்பெறாமல் தேர்தல் சுமுகமாக நடைபெற்றதாகவும் 70 சதவீதமான வாக்காளர்கள் வாக்களித்தனர் என்று ஒரு தரப்பு தகவல் தெரிவித்தது.

தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், வாக்குசீட்டுகளை அபகரித்தல் போன்ற தேர்தல் வன்முறைகள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெற்றதாக மற்றொரு தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

தேர்தல் முடிவுகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு 27 பாரதூரமான வன்செயல்கள் நடைபெற்றதாகவும் இரண்டாவது தரப்பின் தகவல்கள் சுட்டிக்காட்டின.

## பெரிய அளவில் வன்முறைகள் இன்றி நேற்றைய மாகாணசபைத் தேர்தல்

### 70 சதவீதமானோர் வாக்களித்ததாக கணிப்பு

கொழும்பு,ஓக.24

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்புகள் நேற்று அசம்பாவிதங்கள் இன்றி சுமுகமாகவும் அமைதியாகவும் நடைபெற்றன. நேற்று மாலை ஆரம்பமான வாக்கு எண்ணும் பணிகள் நேற்று நள்ளிரவு இச்செய்தி எழுதப்படும் வேளையிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நேற்று நடைபெற்ற தேர்தலில் வாக்களிப்பின் போது வாக்காளர்களை அச்சுறுத்தும் சில சம்பவங்கள் மட்டுமே இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### முதலாவது முடிவு

நேற்று நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தின்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முடிவுகளை பாதிக்கவல்ல 27 பாரதூரமான வன்செயல்கள்

### தேர்தல் கண்காணிப்பு நிலையம் அறிவிப்பு

கொழும்பு,ஓக.24

வடமத்திய மாகாண சபைக்கும் சப்பிரகமுவ மாகாண சபைக்கும்நேற்று நடைபெற்ற தேர்தலில் முடிவுகளை பாதிக்கக் கூடியவை எனக் கருதப்படும் 27 பாரதூரமான வன்செயல்கள் நடைபெற்றதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் நிலையத்தின் அறிக்கைப் பிரகாரம் இரண்டு மாகாணங்களிலும் 27 பாரதூர

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் முதலில் 833 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படும்

### நேற்றைய உயர் மட்ட மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம்,ஓக.24

வலி.வடக்கு அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க எல்லையில் இருந்து 600 மீற்றர் தூரத்தில் உள்ள பகுதியில் 833 குடும்பங்களை உடன் மீள் குடியமர்த்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, பன்னாலை, கட்டுவன் மேற்கு, வித்தகபுரம், தந்தைசெல்வபுரம், துர்க்காபுரம், தெல்லிப்பழை கிழக்கு ஆகிய கிராம சேவையாளர்பிரிவுகளைச் சேர்ந்தவர்களே முதற்கட்டமாக மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றியபின்னர் மக் கள் அந்தப் பகுதியில் மரங்களை வெட்டி காணிகளை துப்புரவுசெய்து குடியமர்வர். அவர்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்க அரசு உதவிகளை வழங்கும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான சிங்கள மாணவருக்கு தெற்கில் அனுமதி

### பல்கலை. மானியக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.24

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகளுக்கு தெரிவு செய்யப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்களை தெற்குப் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிழக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயில் படையினரின் முன்நகர்வை முறியடித்ததாக புலிகள் தரப்பில் அறிவிப்பு

வவுனியா,ஓக.24

துணுக்காய், வன்னேரி ஆகிய இடங்களில் இருந்து படையினரின் கொமாண்டோ அணிகள் நேற்று பிற்பகல் 4 மணிக்கு மேற்கொண்ட முன்நகர்வை முறியடித்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது:

துணுக்காயிலும், வன்னேரியிலும் சிறிலங்கா சிறப்பு கொமாண்டோப் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் தமிழீழ

(16 ஆம் பக்கம் பார்க்க)

### நாகர்கோவிலில் தாக்குதல் இரு சிப்பாய்கள் பலி

நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் காலை 6.35

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அரச அதிபருக்கு திடீர் இடமாற்றம்; அவரின் இடத்துக்கு இமெல்டா சுகுமார்?

வவுனியா,ஓக.24

வவுனியா அரச அதிபர் எஸ்.சண்முகம் திடீரென, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொதுநிர்வாக அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றத்துக்கான காரணம் எதுவும்தெரிவிக்கப்படவில்லை. இன்னும் ஒரு மாத காலத்தில் அவர் சேவையில் இருந்து ஓய்வுபெறவிருந்தார்.

இதேவேளை -

வவுனியா அரச அதிபராக முல்லைத் தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிய வந்தது.

வவுனியா மாவட்டத்துடன் முல்லைத் தீவு மாவட்டத்தின் பொறுப்புக்களை அவர் பதில் கடமையாக மேற்கொள்வார் என்று கூறப்படுகின்றது. (அ-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




Basic level
ENGLISH

A General English Course designed to cover and improve the 4 main language skills of Reading, Writing, Listening & Speaking.

Commencement:-29th,31st August 2008. Register Before :28th August 2008
Duration : 3Months Time:-10.00 am

G.C.E O/L மாணவர்களுக்கான
Eniglih Literature

G.C.E O/L மாணவர்களுக்கான Eniglih Literature வார,வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. ஓர் பிரிவில் 30 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். ஆகவே உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

2008 O/L பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களே இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
ஆரம்பம் 29.08.2008, 31.08.2008 பகல் 10.00மணி

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8232 Fax: 021 222 6933







# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது
கல்லூரியின்
ஆசிரியர்
திருமதி
சாந்தகுமாரி
முருகவேல்
அவர்களின்
அன்புத் தாய்

திருமதி
## தையல்நாயகி கதிர்காமதாசன்
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

அவர்கள் 25.07.2008 அன்று காலமானார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*யா/கம்பர்மலை வித்தியாலயம், கொம்மந்தறை, வல்வெட்டித்துறை.*
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.


மலிவு விலையில்.....
திருமண அழைப்பிதழ்கள்




புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
அடோனா அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
# 6B, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
T.P :021 2228929, 021 4590268.
இணையத்தள முகவரி : www.andradesigns.com



ரைப்பிங் தெரிந்தவர்கள் உடன் தேவை

எமது நிறுவனத்திற்கு கணனியில் தமிழ் ஆங்கில ரைப்பிங் தெரிந்த அனுபவமுள்ள பெண்கள் தேவை
ஆர்வமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்.

நேர்முகத்தெரிவு
27-08-2008 (புதன் கிழமை) காலை9.00மணி-4.00மணி

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
ANDRA DIGITAL IMAGE
356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: 021 2228929,021 4590268


# மரண அறிவித்தல்

## திருமதி நவரத்தினம் சரோஜினிதேவி
### இணுவில் (செல்வம் மெக்கானிக்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் சரோஜினி தேவி நேற்று (23.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், நவரத்தினத்தின் பாசமிகு மனைவியும், சாவித்திரி, மோகனரூபராணி (மோகனா), சிவனேசன் (செட்டி - இத்தாலி), கணேசமூர்த்தி (மூர்த்தி - இத்தாலி), பவானந்தமூர்த்தி (பவான்), மகாராணி, கோவிந்தமூர்த்தி (கோவிந்தன்), சசிகலாராணி (சசி - லண்டன்), லோகராணி, குபேரமூர்த்தி (குபேரன்), தணிகைராணி (ஜேர்மன்), திருச்செல்வி (ஜேர்மன்), ஜனமேஜெயன் (கோபு - இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், காசிப்பிள்ளை, செல்வநாதன், விஜயகேதீஸ்வரி, கோணேஸ்வரி, வளர்மதி, பார்த்தீபன், ஞானேஸ்வரி, ஞானாகரன், ரஞ்சன், ராதா, முத்துலிங்கராஜா, மணிவண்ணன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இணுவில் மேற்கு, இணுவில்.*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## மனுவேற்பிள்ளை ஞானப்பிரகாசம்

ஆனைக்கோட்டை, கூழாவடியைப் பிறப்பிடமாகவும் போயிட்டி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை ஞானப்பிரகாசம் (பாக்கியம்) நேற்று (23.08.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா ஞானப்புவின் மருமகனும், காலஞ்சென்ற திரேசம்மாவின் (பெரிய பிள்ளை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கராணி, தங்கராசா (சுவிஸ்), ஜெயம் (நோர்வே), விஜியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பேசி (கொழும்பு), நேசமலர் (சுவிஸ்), ராஜகுமாரி (நோர்வே), பவளம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யேசுரட்ணம் (மானிப்பாய்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் நாளை (25.08. 2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு போயிட்டி சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*போயிட்டி, இளவாலை.*
பெறாமகள் (மல்லிகா).

## இராமலிங்கம் சிவசம்பு



ஏழாலையை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவசம்பு நேற்று (23.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.08. 2008) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*பிள்ளையார் கோயிலடி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.*
சி.ரவி(மகன்)

# மரண அறிவித்தல்

## பூதத்தம்பி விசுவலிங்கம்



செல்லர் வீதியைப் பிறப்பிடமாகவும், கெனடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை என அன்பாக அழைக்கப்படும் பூதத்தம்பி விசுவலிங்கம் 22.08.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் பூதத்தம்பி - பொன்னம்மாவின் அன்பு மகனும், அமரர்கள் செல்லத்துரை - அம்மணிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் பூதத்தம்பி கனகசபாவதி, அமரர் பூதத்தம்பி இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், ராதாராணி, இராசலிங்கம் (லிங்கோ பட்டறை உரிமையாளர்), சத்தியலிங்கம் (சத்தியன்ஸ் உரிமையாளர்), சோதிலிங்கம்(லண்டன்), பாலசுப்பிரமணியம் (லண்டன்), விஜயராணி (இந்தியா), பஞ்சலிங்கம் (லண்டன்), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராஜா (C.S.K முன்னாள் ஊழியர்), ராஜேஸ்வரி, சித்திரா, சுஜித்திரா, கெங்காதரன், ஜெயரதி, ரவிச்சந்திரன் (குயினா போட்டோ உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயசுதன், சங்கீதா, சுகிராஜ், சிந்துஜா, சுஜித்தா, ஸ்ரெவ்வாணி, றொஷான், சஞ்சீவன், கீர்த்திகா, அபிஜேல், சியான், கபிலன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராசதுரை பாக்கியலட்சுமியின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24. 08. 2008) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*42/55, கெனடி வீதி, இராமலிங்கம் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.*
தகவல்:
வி.இராசலிங்கம் (மகன்)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 ★ 03 ★ 1941



மறைவு 07 ★ 09 ★ 2007

## அமரர் பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்
(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம்)

திதி: 26.08.2008 - ஏகாதசி

ஆண்டு ஒன்று போனதா? - அப்பா
ஆறவில்லை எம் இதயம்
இன்று வரை நம்ப முடியவில்லை - நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்களென்று
ஆனாலும் உங்கள் ஆசைப்படியே - அப்பா
மீண்டும் வந்துவிட்டீர்கள்
உங்கள் பிள்ளையின் பிள்ளையாக...!

*'மயூரபவனம்' உடுவில், சுன்னாகம்.*
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரன் - அக்ஷயன்.


பதவி வெற்றிடம்

சுத்திகரிப்பாளர் (பகுதி நேரம்)

IBMS நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
பகுதிநேர அடிப்படையில் நிறுவனத்தை சுத்தம் செய்வதற்கு ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுடையோர் தமது சுயவிபரக்கோவையுடன் 26th திகதி 3.00 மணிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு சமூகம் தரவும்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.



2008ல் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
காலத்தை விரயமாக்காதீர்... எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்...
எங்குமில்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்
2008 A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் Pending result அடிப்படையில் சேர்க்கப்படுவார்கள்.
சித்தி எய்த தவறும் பட்சத்தில் 100 % கல்வி கட்டணம் மீளளிக்கப்படும்.

2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
August 28th பாடசாலையில் இருந்து விலகும் நீங்கள் இரண்டு வாரத்திலேயே உங்கள் பட்டப்படிப்பை ஆரம்பியுங்கள்.
சொற்ப அளவிலேயே அனுமதிகள் உள்ளதால் எம்மை விரைவாக அணுகுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

DONT MISS THIS GREAT OPPORTUNITY

Courses Offered:
Bachelor of Engineering (BE)
- Electronics & Communication Engineering
- Information Technology
- Electrical & Electronics Engineering
- Computer science & Engineering
- 4Years
(Normal tution fees Rs(Ind)1.2 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.2Lakh/Yr)
- Civil Engineering
- Mechanical Engineering
- Fashion Technology
(Normal tution fees Rs(Ind)1 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.1Lakh/Yr)

விண்ணப்ப முடிவு திகதி 30.08.2008
தவணை அடிப்படையிலான கல்வி கட்டணம்
கல்வி ஆண்டு ஆரம்பம் 15.09.2008

No Sponsor ship, Bank balance, Consultation Charges
No Ragging

A/Lல் 3Cக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு கட்டணத்தில் விசேட சலுகை.......
Missed the E-facuty! Leave the worries!
SONA - A Perfect place, more than your expectation!
Direct admissions from Sona College

SONA College is rank 27th among more than 2000 Engineering Colleges in INDIA
Sona college rank 5th under the Anna University

LONDON A/L STUDENTS ALSO CAN APPLY

Just make a call at any time to reach us —

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
web : www.sonatech.ac.in

Director-International Admissions, Sona College of Technology, Selam-636005,Tamilnadu,INDIA

நேரடித் தொடர்பு:- The Express Institute

Mr.S.Jeyakanth -TP.0773367257, 0774366714. Mr.T.Elankeethan -TP.0212228374, 0775936343. Email - v4educationalconsultancy@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையோடு புதைந்து போன மாணவரின் மனங்கள்!





கௌசி கெட்டிக்காரியான மாணவி. புலமைப் பரிசில் பரீட்சையில் அதியுச்சப் புள்ளிகளைப் பெறக்கூடியவள் என ஆசிரியர்களும், பெற்றோரும் ஆரூடம் கூறியிருந்தனர். அவளும் மாதிரிப் பரீட்சைகளில் உயர்புள்ளிகளையே பெற்றுவந்தாள். புலமைப்பரிசில் பரீட்சை வந்தது. பரீட்சையை எதிர்கொள்ள மகிழ்வோடு போன கௌசி, முதலாவது வினாத்தாளைப் பார்த்த கணமே, அவளது தன்னம்பிக்கை தளர்ந்து போனது. கைகள் நடுநடுங்க பரீட்சையை எழுத முற்பட்டாள். அவளுக்கு கொடுக்கப்பட்ட 45 நிமிடத்தில் அவளால் வெறும் 30 கேள்விகளுக்கே விடையளிக்க முடிந்தது. வெற்றிப் பெருமிதத்தோடு மகள் வருவாளென்று வாசலில் காத்திருந்த பெற்றோர், 'ஓ' வென்று அழுதபடி வரும் மகளையே கண்டனர்.

இது அண்மையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் போது இடம்பெற்ற சம்பவம். கௌசி என்ற மாணவிக்கு மட்டுமல்லாது, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பெரும்பாலான மாணவர்களுக்கு இவ்வாறான அவலம் நேர்ந்துள்ளது. இதுவரை நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைகள் எல்லாவற்றை யும் விட, இம்முறை நடந்த பரீட்சை மாணவர் களின் வேதனையும், பெற்றோர், ஆசிரியர்களின் கடும் அதிருப்தியையும் மிக அதிகமாகவே சம்பாதித்துள்ளது.

இப்பரீட்சையில் தோற்றிய மாணவர் ஒருவரின் பெற்றோர் இது தொடர்பான தனது கருத்துக்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்:

வருடந்தோறும் இடம்பெறும் பொதுப் போட்டிப் பரீட்சைகள் வழமையாக கடந்த கால வினாத்தாள்களின் சாயலில், அவற்றின் வடிவத்தில் எண்ணத்தில் அமைந்திருப்பதே வழமை. அந்த வகையிலேயே இம்முறை புலமைப்பரிசில் ப்ரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களிற்குரிய தயார்ப்படுத்தல்களும் பாடசாலைக்குள்ளும் புறமும் அமைந்திருந்தன. ஆனால் இம்முறை பரீட்சையின் பகுதி 1 வினாத்தாளைப் பார்த்ததும் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். பந்தி பந்தியாக பக்கம் பக்கமாக காணப்பட்டது மட்டுமல்லாது விடயதானமும் வேறு உத்தியுடன் காணப்பட்டது.

சூழலையும் மரபுக் கணிதங்களையும் கரைத்துக் குடித்து விட்டுப் போன பத்து வயதுப் பாலகர்கள் பரிதவித்துத் திணறினர்; திகைத்தனர். முன்பின் காணாத வடிவமும் எண்ணமும் கொண்ட வினாத்தாளிற்கு விடையளிக்க நேரவறுமை காணப்பட்டது. அளிக்கப்பட்ட 45 நிமிடங்களில் முழுவதுமாக 40 வினாக்களிற்கு விடையளிக்க முடியாமல் போனமை பொதுவான கதையாகத்தான் காணப்பட்டது. நகரிலே பல பாடசாலைகளின் மாணவர்கள் அழுதவண்ணம் விடைத் தாள்களைக் கையளிக்கப் பின்னடித்துள்ளனர்.

சந்திப்பும் வடிவமும் : பிரமன்

உண்மையில் ஆசிரியர்கள் கூட தமக்கே மேற்படி வினாத்தாளிற்கு மேலதிக 45 நிமிடங்கள் தேவை எனத் தெரிவிக் கின்றனர்.

### பரீட்சைகளில் பற்றற்ற நிலைக்கு....

நாடு முழுவதும் இதே நிலை என்றாலும், இலங்கையின் கல்வி நிர்வாக அமைப்பில் இம் மாணவர்கள் மேலும் 2 பொதுப்பரீட்சைகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் இவர்கள் மனதில் பரீட்சைகள் தொடர்பில் நிச்சயமற்ற பற்றற்ற நிலைஏற்பட வாய்ப்புண்டு.

''பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு அழுகையோடு வந்த பிள்ளை, இயல்பு நிலையை அடைவதற்குள் நாங்கள் பெரும்பாடுபட்டு விட்டோம். எங்கடை ஆறுதல் வார்த்தைகள் மூலம் அவன் கொஞ்சம் தேறியிருந்தாலும், இடையிடையே பரீட்சையைப் பூரணமாகச் செய்ய முடியவில்லையே என்று ஆதங்கப் புட்டுக்கொண்டேயிருக்கிறான். நானறிந்த வரையில் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய பிள்ளைகள் அழுதபடி வெளியே வருவது இதுதான் முதல்முறை'' என தன்னுடைய பிள்ளைபடும் பாட்டை இன்னொரு பெற்றார் வேதனையோடு விவரித்தார்.

இலங்கைத்தீவில் தரம் 5 இல் பயிலும் மாணவர்களின் உளமகிழ்வை சுனாமி போல் ஓர் உலுப்பு உலுப்பியிருக்கும் 2008 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பல தரப்பட்டோரிடம் பெற்றுக் கொண்ட தரவுகள் இன்னும் சில அதிர்ச்சியான தகவல்களையே தந்தன.

### நேரம் போதாது

இம்முறை பரீட்சைத்தாளில் வந்த 40 வினாக்களையும் செய்துமுடிக்க 45 நிமிடங்கள் போதாது என்ற குற்றச்சாட்டு எல்லாத் தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் இவ் வினாக்களுக்கு விடையளிக்கவே ஏறக்குறைய ஒவ்வொரு வினாவுக்கும் 2 நிமிடங்களுக்கும் மேல் தேவைப்படுகின்றது. அந்தளவிற்கு கடினத்தன்மையை உள்வாங்கிக்கொண்டு வினாக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, தரம் 5 இற்குரிய உளவயதினையுடைய பிள்ளை இவ்வினாக்களை 45 நிமிடத்திற்குள் செய்ய முடியாதநிலை திட்டமிடப்பட்டே உருவாக்கப்பட்டுள்ளது போல் தெரிகின்றது.

எதிர்பார்க்கை வினாக்களுக்கு ஏற்ற வகையில் வரும் பிள்ளைகளின் உண்மையான சுய உளவிருத்தித் திறனை அறிவ தற்கு இவ்வாறான வினாக்களே தேவை. குறித்த நேரத்திற்குள் வினாக்கள் அத்தனையையும் செய்துமுடிப்பதும் மாணவர்களின் ஒரு ஆற்றல்தான். அதற்கேற்றவாறு மாணவர்களை ஆசிரியர்களும், பெற்றோருமே தயார் செய்திருக்க வேண்டும். அதைவிடுத்து பரீட்சைத் தாளின் மீது குறை கூறுவது அழகல்ல என்ற சாரப்பட கொழும்பில் கல்வித்திணைக்கள உயர் வட்டாரங்கள் க்ருத்து வெளியிட்டதாகத் தகவல்.

### எதிர்பாராத மாற்றங்கள்

''இவையெல்லாம் வெறும் சப்பைக்கட்டுக் காரணங்கள். உண்மையிலேயே 2008 புலமைப் பரிசில் வினாத்தாள் குறைகளைக் கொண்டுள்ளதோடு, மாணவர்களிடத்தே பலவிததாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது'' என வினாத்தாளில் உள்ள பல குறைகளை புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் 'பெயர்பெற்ற' ஆசிரியரொருவர் பட்டியற்படுத்துகின்றார்.

1. வழமையாக முதலாவது பகுதி வினாத்தாளில் மூன்று தெரிவு விடைகள் வழங்கப்படும். ஆனால் இம்முறை 4 தெரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. இது மாணவர் ஒரு வினாவைச் செய்து முடிக்க எடுக்கும் நேர அளவினை அதிகரிக்கச் செய்யும்.

2. வினாத்தாளின் கட்டமைப்பு சிறுவர் உளநலனுக்கு பாதகமான முறையில் உள்ளது. வழமையாக இலகுவான வினாக்களிலிருந்து கடினமான வினாக்களை நோக்கிச் செல்வதாக வினாக்கள் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இம்முறை ஆரம்பத்தில் கடினமான கேள்விகளும், வினாத்தாளின் இறுதிப் பகுதியிலேயே குறிப்பாக வினா எண் 34 லிருந்து 40 வரை - இலகுவான வினாக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இதனால் முதலில் கடினமான வினாக்களில் தமது நேரத்தைச் மாணவர்கள் செலவிட்டமையால், இலகுவான வினாக்களை செய்ய முடியாமற் போய்விட்டது. இதனால் தேவையற்ற புள்ளியிழப்பினை மாணவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

### வயதுக்கு விஞ்சிய வினாக்கள்

3. மாணவர்களின் உளவயதை விஞ்சிய வினாக்கள், சொற்பிரயோகங்கள் என்பன அதிகளவில் பரீட்சையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக ''தசாப்தம்'' என்ற சொற்றொடரைப் பல மாணவர்கள் விளங்கிக்கொள்ள முடியாது பரீட்சையின்போது தடுமாறியுள்ளனர்.

4. பரீட்சைத்தாளின் மூலப்பிரதி சிங்கள மொழி என்பதால் அதனைத் தமிழ்ப்படுத்தும் போது காட்டப்பட்டுள்ள அலட்சியங்கள் சில வினாக்களில் மாணவர்களுக்கு மயக்க நிலையைத் தோற்றுவித்துள்ளன.

அ) சிங்கள மக்களிடையே புழக்கத்தில் உள்ள, ஆனால் தமிழ் மக்களிடையே பயன் பாட்டில் இல்லாத [illegible] பற்றிய வினா.

ஆ) பகுதி 1 இல் 31 ஆவது வினாவிலுள்ள படத்தில் வரையப்பட்டுள்ள ஆசிரியை சிங்களப் பாணியிலான உடையை அணிந்திருப்பதினால் அது ஆசிரியரா? அல்லது வேறு உயர் பிரமுகரா? என்ற ஐயப்பாட்டினை ஏற்படுத்துதல்.

இ) பகுதி 1 இல் 5 ஆம் வினாவில் தரப்பட்ட 4 தெரிவு விடைகளுள் 2 விடைகள் வினாவிற்கு மிகப் பொருத்தமாக அமைதல்.

### மொழிமாற்றத்தில் அக்கறையீனம்

இவையெல்லாம் மொழிமாற்றம் செய்த போது காட்டிய அக்கறையீனத்தின் விளைவே ஆகும்.

மாணவர்கள் வாழ்கின்ற சூழல், இனம், மொழி, பண்பாடு பற்றிய கரிசனைகளோடு வினாத்தாள்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்ற பொதுவான கருத்தியல் கூட இங்கு மீறப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த ஆசிரியர் பட்டியலிடுகின்ற பல விடயங்களினை, வினாத்தாளினை அவதானித்தபோது எம்மாலும் உறுதிப்படுத்த முடிந்தது.

''பொதுவாகவே பகுதி 1 இல்தான் 100 சதவீதமான புள்ளிகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்கள் செல்வார்கள். ஆனால் இம்முறை நடந்ததோ வேறு. முதலாவது பகுதியில் பல வினாக்களை தவறவிட்ட பதற்றத்திலும், கவலையிலும் இலகுவான இரண்டாவது பகுதியைக்கூட ஒழுங்காக செய்யமுடியாத நிலையே காணப்பட்டது'' என மாணவர்களின் அவலநிலை பற்றி புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் கடந்த காலங்களில் உயர்நிலை வகித்த பாடசாலை ஒன்றின் அதிபர் எடுத்துரைத்தார்.

### மாணவர்களுக்கு மனவடு ஏற்படுத்திய பரீட்சை

இவ்வாறான பெரும் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ள 2008 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களிடத்தே உடனடியான மற்றும் நீண்டகால மனவடுக்களை ஏற்படுத்தியிருப்பதாகப் பல பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ். நகரப் பாடசாலை ஒன்றில் சில மாணவர்கள் விடைத்தாள்களை கொடுக்காது அவற்றின் மீது படுத்திருந்தபடி அழுத சம்பவங்களும் புலமைப் பரிசில் பரீட்சையின்போது அரங்கேறவே செய்துள்ளன. சில பிள்ளைகள் பரீட்சை மண்டபத்தில் ஆரம்பித்த அழுகையை நிறுத்த இரண்டு மூன்று நாள்களும் எடுத்திருக்கின்றன. வேறு சில இடங்களில் 'தமது பிள்ளைதான் ஒழுங்காகப் பரீட்சையை எழுதாமல், நேரம் போதவில்லை என நாடகமாடுவதாக' நினைத்து தம் பிள்ளைகளைப் பெற்றோர் கடுமையாகத் தண்டித்த நிகழ்வுகளும் நடந்துள்ளன.

சில தினங்களாக கொழும்பில் நடைபெற்று வந்த பரீட்சைக்கு புள்ளியிடல் தொடர்பான கலந்துரையாடல் எவ்வித தயவோ மாற்றமே இன்றி திருத்தல்களை மேற்கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளதாக அறிய வந்துள்ளது.

எனினும் ''மாணவர்கள் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க முடியவில்லை எனக்கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில், கடந்த காலங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அதே சதவீதத்திலேயே இம்முறையும் மாணவர்கள் சித்தியடைவதற்கேற்றவாறு வெட்டுப்புள்ளி அமையும். பரீட்சைப்புள்ளிகள்தான் குறையுமேயொழிய, சித்தியடையும் மாணவர் எண்ணிக்கை குறைவடையாது'' என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகத்தின் கருத்து, 2008 புலமைப்பரிசில் பரீட்சையால் நொந்துபோயுள்ள மாணவர்களுக்கு ஒரு ஆறுதல் மருந்தாகவே அமைந்துள்ளது.

அளவுக்கதிமான திணித்தல்கள் - மனனம் பண்ணுவித்தல் - எண்ணிலடங்கா எதிர்பார்க்கை வினாத்தாள்கள் - ஒரு நாள் கல்விக் கருத்தரங்குகள் - மணித்தியாலத்துக்கொரு தனியார் கல்வி நிலையங்கள் இவை எவையும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு உதவமாட்டா என்ற செய்தியை மாணவர்களிற்கு குறிப்பாக பெற்றோருக்கு இப்பரீட்சை 'ஆணி'த்தரமாக (அறைந்து) கூறிவிட்டது என்று பெற்றோர்களில் ஒருவர் கூறிய கருத்து மெத்தவும் உண்மையே.

எனினும் ஏற்கனவே தரம் ஐந்து மாணவர்களிற்கு சுமைக்கல் என்று கருதப்படும் புலமைப் பரிசில் பரீட்சையை 2008 ஆம் ஆண்டு பரீட்சை இன்னும் பாரமாக்கியுள்ளது. கூடவே சிறுவர் உளநலன் தொடர்பான பலவிடயங்களையும், மாணவர்களின் ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குழி தோண்டிப் புதைத்துவிட்டதென்பதே பரவலான கருத்தாகும்.

இதுகுறித்து யாரொடு நோவது? அதிகாரிகளின் புலமைத்துவச் செருக்கும் மாணவர் உளநிலையறியாத போக்கும், தமது கெட்டித்தனத்தைச் சின்னஞ்சிறிசுகள் மீது சோதிக்கும் சின்னத்தனமும் 2008 புலமைப்பரீட்சையில் பளிச்செனத் தெரிகிறது. ★


## சுனாமியாக வந்து சிறுவர்களை உலுப்பிவிட்டிருக்கிறது

## விடைத் தாள்களை வைத்துக்கொண்டு அழுது குளறிய பரிதாபம்!

## செருக்கு மிக்க அதிகாரிகள் ஈடுசெய்வார்களா பிஞ்சுகளின் மனோநிலையையும் எதிர்காலத்தையும்?

---

# திருமலையிலிருந்து உயர் அதிகாரிகள் வருவதால் யாழ்.மக்களுக்குப் பலன்கள், நன்மைகள் உண்டா?




அடுத்தவாரம் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையில் நிலையத்தலைவர்களது கண்காணிப்புக்குழுக் கூட்டத்திற்கு வடமாகாண ஆளுநரின் செயலாளரும் சுகாதார அமைச்சின் செயலாளரும் வருகை தரவுள்ளனர்.

இவர்களது வருகை எமது பிரதேசத்தில் உள்ள சுகாதார சேவையில் உள்ள குறைபாடுகளை போக்கவே என்பது வரவேற்கத்ததக்கது; பாராட்டுக்குரியது. ஆனாலும் இவர்கள் ஆண்டிற்கு ஒரு தடவை குறிப்பாக நல்லூர் உற்சவ காலத்தில் கடமை விடுப்பில் இங்கு வந்து செல்வது இவர்கள் இங்கு வருவதன் முதன் நோக்கம் மக்கள் சேவையா அல்லது நல்லூர் வழிபாடா என்பதனை சந்தேகிக்க வைக்கிறது.

காரணம் இவர்கள் இங்கு வந்து உறுதிமொழியினை வழங்கிவிட்டு அடுத்த வருடம் நல்லூர் திருவிழாவிற்கே மீளவும் வருவர். அதற்கிடையில் மக்களுக்குப் பயன்படும் விடயங்கள் எதுவும் பெரிதாக நடைபெற்று விடுவதில்லை.

18 வருடங்களாக இடமின்றி இயங்கும் காசநோய் வைத்தியசாலைக்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தினையோ அல்லது அங்கு கடமைபுரியத் தேவையான ஊழியர்களையோ நியமிக்க எவ்வித நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கப்படாதிருப்பது இதற்குநல்ல உதாரணம். 10 வைத்தியசாலைகளில் நுணுக்குக்காட்டித் தொழில்நுட்பவியலாளர்களை காசநோய்க் கிருமிகளை கண்டறிய நியமிக்க இவர்கள் ஆவன செய்யவில்லை. இதனை நிவர்த்தி செய்ய, உயர் அதிகாரிகள் உரியவாறு செயற்பட பொதுமக்களது அழுத்தம் அவசியம்.

மேலும் வடக்கு மாகாண நிர்வாகப் பணிமனை திருகோணமலையில் இயங்குவது முடமாகக்கிடக்கும் வடமாகாண நிர்வாகத்தை மேலும் முடமாக்கி வைத்துள்ளது. மாகாண நிர்வாகம் என்பது அந்தந்த மாகாண மக்களின் குறைகளைக் கண்டறிந்து உடனடியாகத் தீர்க்க கூடியதாக செயற்பட வேண்டும். எனவே, வடமாகாண நிர்வாகக் கட்டமைப்பு வடமாகாணத்தில் அதிக சனத் தொகையை உடைய யாழ்.மாவட்டத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும். ஆனால் அது திருகோணமலையின் புறநகரான வரோதய நகரில் அமைந்திருப்பது, வடபகுதி மக்கள் தலையால் நடந்து தமது தேவைகளை பூர்த்தி செய்யட்டும் என்ற மனப்பாங்கிலேயே ஆகும். இது குறித்து யாழ்ப்பாணம் எங்கே? திருகோணமலை எங்கே என்பது தெரியாத வெளி உலகிற்குப் பூச்சுற்றலாம்.

அரச உயர் அதிகாரிகள் தமது கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். அதிகாரிகள் எவ்வாறு நேர்மையாக நடக்கின்றனரோ அவ்வாறே ஏனைய ஊழியர்களும் சேவையாற்றுவர். அதிகாரிகள் கூட்டமாக இருந்து கொண்டு சர்வாதிகாரத் தர்பாரினை ஏற்கனவே பல மனிதநேய நெருக்கடிகளுக்கு ஆளாகிய யாழ்.மக்கள் மீது மேற்கொள்ளக் கூடாது.

காலத்தின் கண்ணாடியான பத்திரிகைகள் இக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். இல்லையேல் அதிகாரத்தனம் செய்யும் அதிகாரிகள் இளைப்பாறும் வரைக்கும் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருப்பர்.

கோப்பாய். காசநோயாளர் சார்பில் அங்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 24.08.2008



## தேசமெங்கும் அமைதியினைத் திகழச் செய்யே

நீராழி மீனாட்சி நிகழ்த்த ருளால்
நீரடரவத் துயிலதனை நீத்து மண்ணில்
பேரான எழுவீதி பொலியு மிந்தப்
பொன்னாலைப் பதியுவந்து நின்றேயுந்தன்
நேரார வற்புதங்கள் நிலத்திற் காட்டி
நிகரிலருள் பொழியவரு வரத ராஜா
தேரேறி வருகின்ற தேவே கண்ணா
தேசமெங்கும் அமைதியினைத் திகழச் செய்யே.

கண்ண னைப்போற் காசினியிற் காக்கும் தெய்வம்
காணமென் றுன்பாதம் கருதித் தொழுவார்
மண்ணதனில் பதைபதைத்து மாண்டும் வாழ்வை
மரநிழலிற் கழிப்பதுவும் முறையோ கண்ணா!
திண்ணமென உந்தனது திருவார் வீதி
தொடக்கிவைத்த பெருமாளே முடித்தும் வைப்பாய்
வண்ணமிகு தேரேறி வருத்து வோரை
வதைத் தெமக்கு அமைதியுறு வாழ்வைத் தாராய்.

க.கு.கந்தையா பிள்ளை அன் சன்ஸ்.


## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

**G.S.லிங்கநாதன் அன் கோ**
எங்கள் பாரம்பரியம், தரமான விலையும் அனைத்துப் புடவை ரெடிமேற் வகைகள், அழகுசாதனப் பொருள்கள், பேபி நீட்ஸ் வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
47, பெரிய கடை, யாழ்ப்பாணம். 13,14, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**S.R.P.அன் சன்ஸ்**
உள்ளூர் விளைபொருள்கள் விற்பனை ஏற்றுமதி ஏகவிநியோகஸ்தர்கள்
இல.18, 19, புதிய சந்தை, புத்தளம். சூராவத்தை, சுன்னாகம்.

**சீமாட்டி புடைவைக்கடல்**
அனைத்துப் புடைவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**திவானி ரவல்ஸ்**
திருமண வைபவங்கள், விழா நிகழ்வுக ளுக்கு குறித்த நேரத்திற்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
மூளாய்.

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**கரன் ஸ்ரோர்ஸ்**
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**ஸ்ரீமுருகன் களஞ்சியம்**
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**கணேசா ஹாட்வெயர் ஸ்ரோஸ்**
மின்சார உபகரணங்கள் ஏகவிநியோகஸ்தர்
காரைநகர் றோட், மூளாய்.

**காந்தி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
சுழிபுரம் சந்தி, சுழிபுரம்.

**இளவரசி சேலைச் சோலை**
பட்டுப் புடைவைகளின் சாம்பிராட்சியம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**யதி களஞ்சியம்**
பல்பொருள் வாணிபம்
மூளாய் றோட்.


## மரண அறிவித்தல்



### விசுவலிங்கம் ஜெகதீசன்

(முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, சோதி வீதியை வசிப்பிடமாக வும் கொண்ட விசுவலிங்கம் ஜெகதீசன் 18.08.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.08.2008 செவ்வாய்க் கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவபூதராயர் வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னகம் (77412)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேதாத்தியான நிகழ்வு

நல்லைக்கந்தன் 19ஆவது நாள் உற் சவத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு தர்ம சாஸ்தா குருகுல தலைவர் தலைமையில் நடைபெறும் வேதாத்தியான நிகழ்வில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தின் குருகுல மாணவர்களையும் சிவாச் சாரியர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.

## கண்ணீர் அஞ்சலி

யா/அராலி இந்துக் கல்லூரியின்
முன்னாள் நெசவு பாட ஆசிரியரும் பழைய மாணவர்
சங்க லண்டன் கிளையின் போஷகருமாகிய

### அமரர் பொன்னம்பலம் காங்கேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன் னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(77416) கல்லூரிச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் கதிர்காமத்தம்பி அருளானந்தன்

(Dip. in Mass.Com., மூத்த ஊடகவியலாளர்,
பாரம்பரிய நவீன நாடக நெறியியலாளர், ஆய்வாளர்)

ஆரமுதாம் தமிழ்மொழியை
ஹாட்லியில் எமக்குக் கற்பித்தவரே
யார் நினைத்தோம் நேற்றுடன்
எமைத் தவிக்க விடுவீர்கள் என
வேரறுந்த விருட்சமென
எமதன்பு நண்பன் தர்சன் அவன்
கண்ணீரில் கரைவதனை நீங்கள்
அறியவில்லையா?

உங்கள் ஆத்மா சாந்திபெற என்றும் இறைவனிடத்தில் பிரார்த்திப்போம்.

(77407)

A/L 2004 Maths மாணவர்கள், Science Center, Point Pedro.

## மரண அறிவித்தல்



### பொன்னம்பலம் காங்கேசு

(முன்னாள் ஆசிரியர்:- காரைநகர் அமெரிக்கன் மிசன் பாடசாலை, அராலி இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, முன்னாள் அறங்காவலர் - மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில்)

பொன்னம்பலம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் நீண்டகாலம் லண்டனில் வசித்தவருமான காங்கேசு மாஸ்டர் என அன்பாக அழைக்கப்படும் பொன்னம் பலம் காங்கேசு 18.08.2008 லண்டனில் காலமானார்.

அன்னார், யாழ்ப்பாணக் கல்லூரி, அராலி மேற்கு வள்ளி யம்மை வித்தியாசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப் பாய் மகளிர் கல்லூரி என்பவற்றின் முன்னாள் ஆசிரியையும் மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலையின் முன்னாள் அதிப ருமான திருமதி இராசலட்சுமி காங்கேசுவின் அன்புக் கணவ ரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும் கலாநிதி இராஜவதனா சிவலோகநாதன், திருமதி காந்திமதி ச்ண்முகவடிவேல் ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாநிதி சிவலோகநாதன், சண்முகவடிவேல் ஆகியோரின் அன்பு மாமனும் டக்சாணா சண்முகவடிவேல், பூரணி சிவலோகநாதன், சிவலோகநாதன் குமரன் ஆகி யோரின் பாசமிகு பேரனும் திருமதி அன்னலஷ்மி வீரசிங்கம், காலஞ் சென்ற திருமதி இராசமணி சிவ பாதசுந்தரம் மற்றும் திருமதி சரசுவதி இராசையா, திருமதி நவரட்ணம் செல்வரட்ணம், திருமதி கோகிலாதேவி கனகசபாபதி, திருமதி கிருஷ்ணபவானி பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், சிவபாதசுந்தரம், இராசையா மற் றும் செல்வரட்ணம், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காரைநகர் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான திருமதி ஆச்சிமுத்து பொன்னம்பலம், திருமதி நல் லம்மா அண்ணாமலை மற்றும் திருமதி செல்லம்மா ஞானரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை Chocolate City Club, South end Road, London E6 2AA மண்டபத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நண்பகல் 12 மணிக்கு City of London crematorium Aldresbrook Road, Manor Park, London E12 5DQ இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
காங்கேசு ரீச்சர் - 0044 208 551 7941
Dr.ராஜவதனா - 0044 208 227 1151
காந்திமதி ரீச்சர் - 0044 208 220 4351

பொன்னம்பலம் ஒழுங்கை,
உடுவில் வீதி, மானிப்பாய். (77413)

அருள்வதனன் சுகந்தினி (மருமகள்).
060 221 9454

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பல இசைக்கருவிகளை ஒன்றிணைக்கும் வல்லமை கொண்ட கலைச்சாதனம் வில்லிசை


கலாவிநோதனின் இப்போதைய தோற்றம்

தன்னார்வத்தோடு 9 வயதில் இசை நாடகத் துறையில் காலடி எடுத்து வைத்து- மேடையில் ஏறிய- கலாவிநோதன் கே.என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி) 73ஆவது வயதிலும் "சரீர வளம் குன்றினாலும் சாரீர வளம் குன்றவில்லை" எனக் கூறிக்கொண்டு தமது கலைப்பயணத்தைத் தொடர்கின்றார்.

கடந்த காலங்களில் இரவிரவாக ஒன்றுக்கு மேற்பட்ட ஆலயங்களில் வில்லிசையால் புராண, இதிகாசக் கதைகளூடாக ஆன்மீகத்தையும் அறிவியலையும் வளர்த்தவர்.

இன்றும் காலச் சூழலைக் கருத்திற் கொண்டு ஊரடங்க முன்னராவது ஒன்று இரண்டு நிகழ்வுகளை மேடையேற்றாமல் இல்லை.

வடமராட்சி மாதனையில் பிறந்து அச்சுவேலியைத் தனது புகுந்த இடமாகக் கொண்டு "அச்சுவேலி சின்னமணி" என அழைக்கப்படும் இவர், ஆசிரியராக; நல்ல பாடகராக; இசைநாடக நடிகனாக; ஊடகவியலாளராக; எழுத்தாளராக பன்முகப்பட்ட துறைகளூடாகச் சேவை புரிந்த சிறப்புக்குரியவர்.

அவரது "கலையகம்" இல்லத்தில் சந்தித்து திரட்டிய தகவல் இங்கே.

## வேறுபட்ட பல ஒலிகளின் ஒன்றிணைப்பு அதன் தனித்துவம் எளிமையான சந்தங்கள் மக்கள் மனங்களை ஈர்ப்பவை

## பன்முக ஆற்றல்களால் சாதனை படைத்த கலா விநோதன்

*கேள்வி:- நீங்கள் வில்லிசைத்துறையில் தீவிரமாய் ஈடுபடக் காரணம் என்ன?*

பதில்:- 1954 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு கொத்தலாவலை வித்தியாலயத்தில் ஆங்கில உதவி ஆசிரியராக கடமையாற்றிக்கொண்டிருந்த வேளையில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மதுரம் குழுவினர் கொழும்பில் தங்கி நின்ற பம்பலப்பிட்டி 'கிறீன்லண்ட்ஸ்' ஹோட்டலில் சினிமாஸ் லிமிட்டட் அதிபர் குணரத்தினம் அவர்கள் மூலம் கலைவாணரைச் சந்தித்து அவருடன் ஒன்றாக இருந்து, கலைநுணுக்கங்களை கேட்டறிந்து கொள்ளச், சந்தர்ப்பம் கிடைத்தது.

என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களால் கேசரி வர்மன் (மனோகராவில் வரும் கேசரிவர் மன் மாதிரி) என்று அழைக்கப்பட்டேன். அத்துடன் கலைஞர் தன்மனைவி மதுரத்தைப் பார்த்து "கண்ணே இவன் என்னைப் போல சாயலுடன் இருக்கிறான். ஏதாவது மரபியல் தொடர்புண்டோ" எனக்கூறி அணைத்து "என்னுடன் இரு" எனக் கூறினார். எனது தாயார் அவருடன் செல்ல விடாமல் தடுத்தமையால் கலைவாணருடன் செல்ல முடியவில்லை. என்றாலும் கலைவாணர் கொழும்பில் தங்கியிருந்த காலப்பகுதி யில் அவரிடம் இருந்து வில்லிசை நுணுக்கங்களையும் நுட்பங்களையும் கற்றுக் கொண்டேன். எனது வளர்ச்சிக்கு கலைவாணர் வழிகாட்டியாக இருக்கின்றார். எனது மானசீக குருநாதன் அவரேதான்.

திருப்பூங்குடி (புங்குடுதீவு) ஆறுமுகம் அவர்களின் வில்லிசைக்குழுவில் இணைந்திருந்த ஆறுமுகம் எட்டியாந்தோட்டைக்கு இடம்மாறிச் சென்ற காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வில்லிசை நிகழ்வுகள் தொடர்பாக இடைவெளி ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதியில் கலைவாணரின் பெயரில் "கலைவாணர் வில்லிசைக் குழு" வை 1968 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி நான் ஆரம்பித்தேன். இந்தக்குழுவில் ஆர்மோனிய வித்துவான் ஆர் .சோமசுந்தரம் மிருதங்க வித்துவான் தங்கம், எஸ்.ரி.அரசு, இரா. பற்குணம்; ரி.மகாலிங்கம் ஆகியோர் இருந்தனர்.

### செல்வச்சந்நிதியில் வில்லிசை அரங்கேற்றம்

எமது வில்லிசை அரங்கேற்றம் 1968 ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவன்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலில், பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அன்று தொடக்கம் இன்று வரையும் எனது வில்லிசைப்பணி தொடர்கின்றது. பல ஆயிரக் கணக்கான மேடைகளில் நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் இயலு மானவரை எனது பணியை செய்துள்ளேன்.


வில்லடிப்பதில் மட்டுமல்ல பிணப்பறை அடிப்பதிலும் வல்லவன் என்பதை எடுத்துக்காட்டி பெரிய பறை மேளத்துடன் காணப்படும் கலாவிநோதன் சின்னமணி

*கேள்வி:- வெளிநாடுகளுக்கு வில்லிசை நிகழ்வுகளுக்கு சென்ற வேளையில் ஏற்பட்ட மறக்கமுடியாத நிகழ்வுகள் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?*

*பதில்:-* 1977 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தில் எங்களது குழு 'எயர்லங்கா' விமானமூலம் கோலாலம்பூரைச் சென்றடைந்தது. அங்கு எமது குழுவினருக்கு மூன்று தினங்களுக்கு மட்டுமே விசா வழங்கப்பட்டது. குறிப்பிட்ட காலப்பகுதியில் மூன்று நாள் விசாவுடன் என்ன செய்வது என்ற கவலையுடன் இருந்தோம்; எல்லாம் இறைவன் செயல் என்ற என்ற தேறுதலுடன்.

அந்த நாளில் 'சலான்கூர்' சங்கீத சபாவில் முத்தமிழ் விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த விழாவில் எமது குழுவின் வில்லிசை நிகழ்வையும் நடைபெறச் செய்ய வேண்டும் என்ற வகையில் உள்ளூர் பிரமுகர்களினால் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. சபா நிர்வாகிகள் நேரம் ஒதுக்க முடியாது என மறுத்த நிலையில் அங்குள்ள பிரமுகர்களின் தனிப்பட்ட வலியுறுத்தலின் பேரில் இறுதி நாள் 1/2 மணி நேரம் ஒதுக்கப்பட்டது. அந்த மேடையில் "கண்ணகி காதை" என்ற தலைப்பில் எமது வில்லிசை நிகழ்வு நிகழ்ந்தது. சபாவில் பெரும் ஆரவாரம். பெரும் வரவேற்பு. நிகழ்வு முடிவடையும் வேளையில் "மேலும் ஒரு மணி நேரம் வழங்கப்பட்டுள்ளது. நிகழ்வினை தொடர்ந்து நடத்தவும்" எனச் சபா நிர்வாகிகள் எம்மைக் கேட்டுக் கொண்டனர். இந்நிலையில் எமது குழு 3 நாள் விசா முடிவடைந்து மறுநாள் இலங்கை திரும்பும் தகவல் மலேசிய பிரமுகர் மட்டத்தில் கவலையை ஏற்படுத்தியது. பின்னர் எமது விசா மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டு வழங்கப்பட்டது. அங்கு தங்கி நின்ற 124 தினங்களில் 144 நிகழ்வுகளை செய்தோம். மலேசியா வானொலியிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை செய்தோம். மலேசியா, சிங்கப்பூர் பத்திரிகைகளில் எமது பேட்டிகளும் பிரசுரிக்கப்பட்டன. பெருமளவில் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டோம்.

கோலாலம்பூர் வள்ளலார் மன்றம் "வில் லிசைக் கலைஞான சோதி" என்ற பட்டத்தையும், சலாங்கூர் சைவமங்கையர் சங்கம் "வில்லிசை வித்தகர்" என்ற பட்டத்தையும், எப்போ பத்திரிகையாளர் சங்கம் 'வில்லிசை வாணன்' என்ற பட்டத்தையும், பத்திங்திபாஸிக் கலை மரபு மன்றம் "முத்தமிழ் மாமணி" என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தன. இது மறக் கவே முடியாத நிகழ்வுகளாகும்.

*கேள்வி:-* வில்லிசையின் வரலாறு பற்றி உங்களது கருத்து எத்தகையது?

*பதில்:-* வில்லிசை தமிழ் மக்களுக்குரிய கலை. இயல், இசை விஞ் ஞான அறிவை வெளிப்படுத்தும் நம் கலைச் சாதனம் வில்லிசை. வில்லில் இருந்து யாழிசை எப்படி உருவானது என்று சுவாமி விபுலானந்தர் கூறியுள்ளார்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே இந்தக்கலை இருந்துள்ளதாக வரலாறு கூறுகின்றது. வில்லிசை தமிழர்களது பல இசைக் கருவிகளை ஒன்றிணைக்கும் வல்லமை கொண்டது. வில்லுடன் குடத்தை இணைத்துள்ளார்கள். வில்லில் தட்டும் போது சதங்கை நாதமும் குடத்தின் வாயில் தட்டும் போது ஏற்படும் ஓசையும் என வேறுபட்ட பல ஒலிகளின் ஒன்றிணைப்பை வில்லிசையில் காணலாம்.

எங்கள் இசை 'மெல்லடி' வடிவம் கொண்டது. தமிழரின் பாதுகாப்புக் கருவியான வில், பின்னர் இசைக் கருவியாக மாறியது. வில்லிசை மூலம் கூறப்படும் கருத்துக்கள், கதைகள் மக்களால் இலகுவில் உணர்ந்து கொள்ளக் கூடியவையாகும்.

வில்லிசை இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் சேர்த்து வழங்கும் கலை; வில்லிசையில் பாடப்படும் பாடல்கள் கிராமிய இசைப் பாடலாக இருப்பதுடன் எளிமையான சந்தங்களையும் கொண்ட தாக இருக்கும். மக்கள் மனங்களில் ஈர்ப்பை ஏற்ப டுத் தும் தனித்துவம் இருக்கும். சிந்து நடை, ஒப்பாரி, தெம்மாங்கு, தாலாட்டு, காவடிச் சிந்து மெட் டுக்களில் பாடப்பட்டு வருதால் வில்லிசை கள நிலைச் சிறப்பையும் கலகலப்பையும் கொடுக் கின்றது.

### வில்லிசையில் சினிமாப் பாடலைச் சேர்ப்பது நல்லதல்ல

வைரம் பாய்ந்த கூந்தல் பனையில் இருந்து சீவி எடுக்கப்படும் தடியை வில்லாக வளைத்து பயன் படுத்தலாம். இவ் வகைப்பனைகள் குறிப்பாக வடமராட்சி கிழக்கில் மருதங்கேணிப் பகுதியில் உள்ளன. வில் லுக்கு விண்ணாங் கி மரத்தையும் பயன்படுத்தலாம்.



கனடா ஒன்ராரியோ தமிழ் இசை கலாமன்றத்தில் வில்லிசை நிகழ்த்துகின்றார்.

வில்லுப்பாட்டுக்கு சினிமாப் பாடல்களை சேர்த்துக் கொள்வதை நான் விரும்பவில்லை. அது வில்லிசையை கொச்சைப் படுத்துவதாக அமைந்து விடும்.

*கேள்வி:- இலங்கையில் குறிப்பிடத் தக்க வில்லிசையாளர்கள் என நீங்கள் கருதுபவர்கள் பற்றி........?*

*பதில்:-* இலங் கையில் வில்லிசைக் கலையின் தந்தை என மட்டக்களப்பு மாஸ்ரர் சிவலிங்கத்தைக் கூறலாம். இலங்கையில் வில்லுப்பாட்டை பரவலாக்கிய கலைஞன் என்ற வகையில் திருப்பூங் குடி ஆறுமுகம் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கது. மற்றும் சபா சதாசிவம், தாவடி வடிவேல், உடப்பு பெரி.ஸ்ரீ சோமஸ்கந்தன், ஈழநல்லூர் கா.சோமசுந்தரசர்மா, ஸ்ரீதேவி ஐயர் சோக் கல்லோ சண்முகநாதன், இராசையா ஸ்ரீ தரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

வில்லிசைத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு முத்தமிழ் அறிவும் அதனை இடத்துக்கு ஏற்புடைய விதத்தில் கையாளும் திறமும், புதியனவற்றை அறிந்து கொள்ளும் தேடலும் இருக்க வேண்டும். மற்றவரைப் பார்த்து பிரதிபண்ணுவது என்பது கலைத்துறையில் எடுபடாது. நின்று நிலைக்கவும் முடியாது. வில்லிசையாளர்களுக்குத் தனித்துவமும் தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும்.

*கேள்வி:-* வெளிநாடுகளில் மேற்கொண்ட வில்லிசை, நாடக நிகழ்வுகள் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா?

*பதில்:-* பல நூற்றுக் கணக்கான நிகழ்வுகளை [illegible] ரீதியாக மேடையேற்றியுள்ளேன்.

[illegible]லும் கனடாவுக்குச் சென்று திரும்பினேன். தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து அழைப்புக்கள் வந்தவண்ணம் உள்ளன. உடல்நலம் குறைவாக இருந்தாலும் வெளிநாட்டுக்குச் சென்று புலம் பெயர்ந்த உறவுகள் மத்தியில் நிகழ் வுகளை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது.

நான் வெளிநாடுகளுக்கு சென்ற வேளைகளில் எல்லாம் அங்குள்ள பத்திரிகைகள் முக்கியத்துவம வழங்கி செய்திகளை வெளியிட்டதோடு, எனது பேட்டிகளையும் பிரசுரித்து உறவுகளை பலப்படுத்தி நின்றன. கனடாவில் காத்தவராயன் சிந்து நடைக் கூத்தையும் பல மேடைகளில் மேடை யேற்றி தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களை பிறமொழியாளர்களும் கண்டு உணர்வதற்கு என்னால் இயன்றளவுக்கு செய்துள்ளேன்.

*கேள்வி:- பாரம்பரிய கலைவடிவங்களைப் பாதுகாப்பதில் ஆர்வம் கொண்டுள்ள உங்களது நாடகப்பணி தொடர்பாக கூறுங்கள்?*

*பதில்:-* எனது பிறந்த ஊரான மாதனை கலை மிளிரும் ஊர். சிற்பம்; சித்திரம் உள்ளிட்ட முத்தமிழ் கலை வளர்த்த கிராமம். எனது அண்ணா "லண்டன் கந்தையா" நாடகப்புகழ் நவரத்தினம், தந்தையார் முத்தமிழ் வித்தகர் நாகலிங்கம் புராண இதிகாசங்களுக்கு பொருள் கூறுபவர். தாயார் இராசம்மா புராண இதிகாசங்களைப் படித்து விளங்கி, உபகதைகளாகக் கூறி, எனக்கு பலமான அடித்தளத்தை இட்டார். இத்தகைய குடும்ப பின்னணி எனது உணர்வுக்கு உரமூட்டியது.

### நாடக இரட்டையர்கள் என்று கலையரசு பாராட்டினார்

இலங்கேஸ்வரன் நாடகத்தில் நான் இலங்கேஸ்வரனாகவும், அண்ணா நவரத்தினம் மண்டோதரியாகவும் நடிப்பதுண்டு.

அந்த நாடகத்தைப் பார்த்த கலையரசு சொர்ணலிங்கம் "பண்பட்ட நடிப்பினால் பாத்திரங்களுக்கு உயிரூட்டிய இருவரும் நாடக இரட்டையர்கள்" என பாராட்டி ஆசீர்வதித்ததை இன்றும் பெருமையாக நினைக்கின்றேன்.

வண்ணை கலைவாணர் நாடக மன்றத்திலும், அரியாலை நாடகமன்றங்களிலும் பல நாடகங்களில் நடித்துள்ளேன். இன்பக் கனவு, வீரமைந்தன் திப்பு சுல்தான், சரியா? தப்பா?, அரிச்சந்திரா, பவளக்கொடி, சத்தியவான்சாவித்திரி, ஸ்ரீஸ்கந்தலீலா; ஸ்ரீ வள்ளி, இராமாயணம், கத்தவராயன், மயானகாண்டம் உள்ளிட்ட பல நாடகங்களில் பல்வேறு பாத்திரங்களை ஏற்று இரசிகர்களின் பாராட்டைப் பெறும் விதத்தில் நடித்துள்ளேன். நாரதர், இயமதர்மராசா, காத்தான், இலங்கேஸ்வரன் பாத்திரங்கள் எனக்கு புகழ் தேடித்தந்த பாத்திரங்கள்.

பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி இருப்பதோடு, நாடகத்துறைக்குப் பலரை அறிமுகம் செய்து புகழ்பெற்ற நடிகர்களாக அவர்கள் பிற்காலத்தில் மிளிர வழிப்படுத்தியுமுள்ளேன்.

*கேள்வி:- தற்போதைய சூழலில் தங்கள் கலையாக்கப்பணிகள் எவ்வாறிருக்கின்றன?*

பதில்:- சமகாலச் சூழல் கலைகளின் வளர்ச்சிக்கு ஏற்புடையதாக இல்லை. கலைகளின் தனித்துவமான சிந்தனை ஓட்டத்துக்கு களநிலை சாதகமாக இருக்க வேண்டும். விரக்தி, விசனம், கவலை, ஏக்கம் உள்ள நிலையில் கலைகளைப் பற்றி சிந்திக்க முடியாது.

**செவ்வி கண்டவர்: ஞானஆதவன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

IN EASTERN EUROPE (BELARUS)




பெலாரசுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள 06 ஆவது மாணவர் அணி







| | | | | |
|---|---|---|---|---|
| அல்பிரட் காயத்திரி - வவுனியா. | அப்துல்காதர் முகம்மது அலின் வேந்தபுலம்- வவுனியா. | சுபாஸ்கர் ஜெயநாதன் -யாழ்ப்பாணம். | யோகேந்திரா அர்ஜுனன்- யாழ்ப்பாணம். | அலோஷியஸ் மரியநாயகம் டிலானி கொட்டாஞ்சேனை. |







| | | | | |
|---|---|---|---|---|
| செகராசசிங்கம் காஷன் - கொட்டாஞ்சேனை. | ஈஸ்வரநாதன் முகுந்தன் - மட்டக்களப்பு. | சிவலிங்கம் நிதர்சன் -வவுனியா. | கிருஷ்ணபிள்ளை சக்குருஸ் - மட்டக்களப்பு. | சண்முகநாதன் சதானந்த் - யாழ்ப்பாணம். |

பொறியியல் (IT) ஏனைய கற்கைகளும் உண்டு
எந்தவொரு கற்கை நெறிக்கும் குறைந்தபட்ட தேவை
ஜி.சி.ஈ. (சா/த) ஆகும்.
இன்றே விண்ணப்பித்து 20 நாள்களில்
விமானத்தில் புறப்படுங்கள்
வங்கி அறிக்கைகள், விசா நேர்
காணல், அனுசரணையாளர்கள் - தேவை
யில்லை. விசா 100% உத்தரவாதம்
2008 அனுமதிக்கான இறுதிநாள் - ஒகஸ்ட்
25 ஆம் திகதி, உ/த மாணவர்கள் அதிபரின்
கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

கடந்த 2 ஆண்டுகளில் சென்றுள்ள 200 மாணவர்
களின் விவரப் பட்டியல் எமது அலுவலகத்திலிருந்து
பெற்றுக்கொள்ளலாம்.
சிறிலங்கா மருத்துவ சபையினாலும் உலகில்
வேறு 70 இற்கு மேற்பட்ட நாடுகளிலும்
அங்கீகரிக்கப்பட்டது.
மருத்துவ கலாநிதி - MD
(ஆங்கில மூலம் 6 வருடம்)
அனுமதிபெற தொடர்புகளுக்கு:
(0773017883)
(ஆங்கிலம் & தமிழ்)

Colombo Ads: 077 244 24 25 - Udara

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane, Colombo - 03.
Tel : 2502012

Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418

www.patheacademy.org


# கிருஷ்ணா ஜெயந்தி திருவிழாக்கள்

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு கிருஷ்ண ஜெயந்தி நவிழா இடம்பெறவுள்ளது. காலை விஷேட சங்காபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகளும் நடைபெறும். (203-224)

* * *

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறவுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் வேணுகோபால சுவாமிக்கு அஷ்டோத்திர கலச சங்காபிஷேகமும் தொடர்ந்து தீபாராதனை, சகஷ்ர நாம அர்ச்சனை என்பன இடம்பெற்று சுவாமி வசந்த மண்டபத்தில் எழுந்தருளுவார். நாளை திங்கட்கிழமை உறியடி உற்சவம் இடம்பெறும். காலை 7 மணிக்கு ஜனன பூசை, தாலாட்டு என்பன இடம்பெறும். பி.ப. 4 மணிக்குச் சுவாமி வீதியுலா வருவார். (203)


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்



நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாறிவகைகள்,
திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்)
விற்பனைக்கு வந்துவிட்டன என்பதனை
எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு முந்துங்கள்

* நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
* றெடிமேட் ஆடைவகைகள்,

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

பான்சி ரகங்கள், வெடிங் கிவ்ற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், றெஜிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும்,
பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி
சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
* சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

புதிய சாறிகள்

| | | | |
|---|---|---|---|
| 1.Aswini | அஸ்வினி | 19.Nepaly Silk | நேபாளி சில்க் |
| 2.Silver Touch | சில்வர் ரச் | 20.Jamasim | யனசின் |
| 3.Muniaandy | முனியாண்டி | 21.Villu Saree | வில்லு சாறி |
| 4.Anna-Tangi | அண்ணா தங்கை | 22.Mecna Silk | மேக்னா சில்க் |
| 5.Vinay Silk | சில்க் வினே | 23.Sofia Saree | சேபியா சாறி |
| 6.Piriyanka-Saree | பிரியங்கா சாறி | 24.Tulsi Silk | ருல்சி சில்க் |
| 7.Kirazy Silk | கிரேசி சில்க் | 25.Varsaw Silk | வர்சோ சில்க் |
| 8.Kofi Saree | கோபி சாறி | 26.Nelco Saree | நெல்கோ சாறி |
| 9.Raj-Guru | ராஜ் குரு | 27.Gawdwal Saree | கோட் வால் சாறி |
| 10.Kuruvvi | குருவி | 28.Robo Silk | ரோபோ சில்க் |
| 11.Kuselan | குசேலன் | 29.Marma Yogi | மர்ம யோகி |
| 12.Kalpana | கல்பனா சாறி | 30.Yarady Nee Mohini | யாரடி நீ மோகினி |
| 13.Luxary silk | லக்ஸ்சறி சில்க் | 31.Susmita | சுஸ்மிற்றா |
| 14.Pandy Saree | பாண்டி சாறி | 32.Just Marriage | யஸ்ற் மறிச் |
| 15.Henstar Saree | கென்ஸ்ரார் சாறி | 33.Sindoor | சிந்தூர் |
| 16.Kalyani Cotton | கல்யாணி கொட்டன் | 34.Gold Glass | கோல்ட் கிலாஸ் |
| 17.Thasavatharam | தசாவதாரம் | 35.Kolkatta | கொல்கத்தா |
| 18.Namitha Silk | நமிதா சில்க் | | |

அரவிந் மில் - மணிஸ்ஸா றெறின் 1 மீற்றர் - 225/=
அரவிந் மில் - சகோறி றெறின் 1 மீற்றர் -275/=
புத்தம்புதிய சுரிதார் தெரிவுகளை திருப்தியாகப் பார்த்து எடுத்துக்கொள்ள ....

இன்று (24.08.2008) ஞாயிறு இரு கடைகளும்
வியாபாரத்துக்காக பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும்.

G.S.லிங்கநாதன் அன்கோ

சாறித் தெரிவுகளுக்கு:-
இல.13,14, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/553995)

ஏனைய தெரிவுகளுக்கு:-
இல.47, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 25.12.1930

ஆண்டவன் அடியில் 25.07.2008



## திருமதி தம்பிமுத்து அன்னமுத்து

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து
பாசத்துடன் வளர்த்தாய் பாரினிலே
அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இலக்கணமாய் இருந்து
எம்மையெல்லாம் வழிநடத்திய அம்மாவே!
இன்று எம்மை இங்கு தவிக்கவிட்டு நீர் எங்கு சென்றீர்?
நீர் மறைந்த செய்தி இன்னும் கனவாய் உள்ளது
கனவிலும் தாங்கமுடியாத உமது பிரிவை
நிஜமாக எப்படித் தாங்குவோம் தாயே?
என்றும் உங்கள் நினைவுடன் எங்கள் உடம்பு
ஊசலாடும் தாயே!

25.07.2008 வெள்ளிக்கிழமை காலமான எமது அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(77353)

உங்களது பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண் மகிழ 27.03.1944

கண் நெகிழ 04.09.2007



## அமரர் வைத்திலிங்கம் குலரட்ணம்

(முன்னாள் முகாமையாளர் IIS Office Automation)

அன்பிலும் அரவணைப்பிலும் பண்பிலும்
எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டிய எங்கள் அன்புத்தெய்வமே அப்பா!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
எம்மனம் ஆறுதல் அடைந்திடுமோ!
அப்பா...அப்பா என்றிட ஆசியுடன்
அனுபவ மொழி கூறி நலமாக ஆற்றிடும்
அன்புத்தெய்வமே அப்பா!
உங்கள் உள்ளத்து நினைவுகள் நிழற்படம்.

273/11 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னொரு காலத்திலே நந்திபுரி எனும் நாட்டை நந்திவர் மன் என்ற அரசன் அரசாண்டு வந்தான். அவனுக்கு இந்திர வர்மன், சந்திரவர்மன் என இரு புதல்வர்கள் இருந்தார்கள். தன்னைப் போலவே தன் புதல்வர்களும் சகல கலைகளிலும் வல்லவர்களாக வேண்டுமென்று நந்திவர்மன் எண்ணினான். அதற்காக கலைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களை அரசவைக்கு வரவழைத்து, இரு இளவரசர்களுக்கும் வேண்டிய பயிற்சியை வழங்கி வந்தான்.



ஒரு நாள் இந்திரவர்மனும், சந்திரவர்மனும் படகுப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அன்று ஆற்றில் நீரோட்டம் அதிகமாகவே காணப்பட்டது. அரண்மனையை சுற்றியே ஆறு ஓடிக்கொண்டிருந்தால், அரண்மனையின் மேல் மாடத்திலிருந்து தன் புதல்வர்களின் படகோட்டும் திறனை நந்திவர்மனும், மகாராணியும் ரசித்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டன. வானமே கிழிவது போல இடி முழங்கியது.

''குமாரர்களே! கடும்மழை வரப் போகின்றது. விரைவாகக் கரைக்குத் திரும்புங்கள்!'' என நந்திவர்மன் உரத்த குரலில் தன் மகன்களுக்கு கட்டளையிட்டான்.

இந்திரவர்மனும், சந்திரவர்மனும் தமது படகுகளைக் கரையை நோக்கி செலுத்த முற்பட்டனர். அப்போதுதான்-

ஆற்றைக் கிழித்துக் கொண்டு ஒரு கரிய ராட்சத உரு வமொன்று எழுந் தது. தன் கோரப் பற்களைக் காட்டிச் சிரித்துக்கொண்டே, அது இளவரசர்களை அணுகியது. இளவரசர்கள் செய்வதறியாது திகைத்தனர். இராட்சத உருவம் தன் இரு கைகளாலும் இளவரசர்களின் படகினைத் தூக்கி ஒரு சுற்றுச் சுற்றி மேலே எறிந்தது. ''ஐயோ!'' என்ற இளவரசர்களின் அவ லக்குரல் எங்கும் எழுந்தது.

*(தொடரும்)*

## மூன்று அப்பிள்கள்



ஒரு சமயம் பாக்தாத்தில் ஜாபர் என்ற ஒருவர், தமது மனைவி ஹசீனாவுடன் வாழ்ந்து வந்தார். ஹசீனாவிற்கு அப்பிள் மீது மிகவும் விருப்பம். அதனால் அவள் ஜாபரிடம் மூன்று அப்பிள்கள் வாங்கி வருமாறு கூறினாள்.

பாக்தாத்தில் அப்பொழுது அப்பிள் கிடைக்கும் பருவமில்லை. அதனால் ஜாபர் பல நாடுகளு க்குச் சென்று அப்பிள்களைத் தேடினார். அவர் தன் மனைவிக்காக அதனை வாங்கி வருவது என்று உறுதி யாக இருந்தார். இறுதியில் அப்பிள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து மூன்று அப்பிள்களை வாங்கிக் கொண்டு திரும்பினார்.

ஹசீனா மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். இதற்கு அடுத்த நாள் ஜாபருடைய மகன் அந்த அப்பிள்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு வழிப்போக்கன் அவனிட மிருந்து அதை பிடுங்கிக்கொண்டு போய்விட்டான். ஜாபர் கடைவீதியில் அந்த வழிப்போக்கன் அப்பிளுடன் செல்வதைப் பார்த்தார். அவருக்கு தன் மனைவி மீது மிகுந்த கோபம் உண்டாயிற்று. தான் மிகவும் சிரமப்பட்டு தேடித் திரிந்து வாங்கி வந்த அப்பிள் பழத்தை சாதாரண வழிப் போக்க னு க்கு தன் மனைவி கொடுத்து விட்டாள் என்று எண்ணினார். வழிப்போக்கன் தன் மகனிடமிருந்து அதைப் பறித்துக் கொண்டது அவருக்குத் தெரியாது.

வீட்டிற்குச் சென்றதும் ஆத்திரத்தோடு கத்தியை உருவி மனைவியைக் கொல்ல முயற்சி செய்தார். அப்போது அவரின் மகன் வீட்டிற்கு வந்து நடந்தவற்றை கூறினான். ஜாபர் உண்மையை அறிந்து சிறிய சந்தேகத்திற்காக மனைவியைக் கொல்ல நினைத்ததற்கு மனைவியிடம் மன்னிப்புக் கோரினார்.

''கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய்''

ஜெ. உஷாந்தினி,
தரம் - 7 சி,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.




## தூக்க முடியாத விரல்

நடு விரலை நன்றாக மடித்து மேசையில் ஊன்றுங்கள். இப்போது பெருவிரலை உயர்த்துங்கள். பின்னர் சுட்டு விரலை உயர்த்துங்கள். சின்ன விரலை உயர்த்துங்கள். இப்போது மோதிரவிரலை உயர்த்துங்கள் - அது தான் தூக்க முடியாத விரல்.

[illegible] கஜேந்,
தரம் - 3 பி, யா/ பெரியபுலம் மகா. வி.

## என்னைப் பெற்றவர்கள்

காலைப் பொழுதினிலே ஓர் நாள்
கட்டிலின் மீதினிலே
என்னை மறந்தே நான்
எண்ணத்தில் ஆழ்ந்திருந்தேன்

ஆலயமணியோசை கேட்டதுவே
அறிந்தேன் நேரமோ ஐந்துமணி
நல்ல உறக்கத்திலே ஆழ்ந்திருந்தாள் - அந்த
நல்லாள் என்னைப் பெற்ற தாயாள்

காலை தொடங்கி மாலை வரை
கால் கை நோக வேலை செய்வாள்
உண்பதற்கும் இனிதாய் எமக்கு
உணவு பகிர்ந்திடுவாள்



என் மனதில் எண்ணினேன் என்னைப் பெற்ற
எந்தையை நானும் - பாவம்
பிள்ளைகள் வாழ்வதற்கு எண்ணி - தன்
பிணிநோக்காது உழைக்கும் ஜீவன்

இதை அறிந்திருந்தும் நான்
இனிமேலும் ஓய்வேனோ? என்னைப்
பெற்ற இரு ஜீவனுக்கும்
பெருமை சேர்க்க உழைக்கேனோ?

இராசலிங்கம் லோகிதா,
தரம் - 9, யா/ புனித தெரேசா மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

## கஜமுகன் பாடசாலை

அச்சுவேலி ஊரிலே
அமைந்த கல்விச்சாலையே
பச்சையான வயல்வெளி
பசுமையான தோப்புக்கள்
மெச்சு புகழ் கஜமுகன்
மேற்கில் எங்கள் கூடமே
மிச்சமின்றி கல்வியை
மிகுந்து பூட்டும் கண்ணகி ரீச்சர்
சச்சரவு செய்திட்டால்
சாந்தமுடன் சாடுவார்
வெள்ளை நீல உடையுடுத்து
பள்ளி நாம் செல்கையிலே
கல்வி தனை அள்ளித் தரும்
கஜமுகன் பாடசாலை

[illegible] நிரஞ்சன்,
கஜமுகன் பாலர்
பாடசாலை,
அச்சுவேலி.



## வாழ்வு

பிறப்பவர் என்றோ இறப்பது திண்ணம்
இறப்பினும் அவர் புகழ் மறையாத வண்ணம்
சிறப்புடன் செவ்வனே வாழ்ந்திடில் வையம் - அவரை
மறப்பதை மறைந்தவர் மகிமையை எண்ணும்

யோ. கு. தனுசன்,
தரம் - 8 பி, புனித பத்திரிசியார் கல்லூரி.

## பொது அறிவு

1. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு?
நியூசிலாந்து

2. சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி யாது?
மூளையின் முன்களப்பகுதி



3. புன்னகை நாடு என அழைக்கப்படும் நாடு எது?
தாய்லாந்து


4. தமிழ்மொழி அரசகரும மொழியாக எப்போது மாற்றப்பட்டது?
1958 ஆம் ஆண்டு

5. ஐம்பது நட்சத்திரங்களைக் கொண்ட தேசியக்கொடி எந்த நாட்டின் உடையது?
அமெரிக்கா

6. மனிதனுக்கு அடுத்த படியாக அறிவுத்திறன் கூடிய விலங்கு யாது?
சிம்பன்சி

7. எந்நாட்டு முத்திரையில் அந்த நாட்டின் பெயர் இருப்பதில்லை?
இங்கிலாந்து

8. வீடுகளிற்கு இலக்கத்தை இடும் வழக்கத்தை ஏற்படுத்திய நாடு எது?
பிரான்ஸ்



9. சதுரங்க விளையாட்டின் தாயகம்?
இந்தியா

10. ''அமைதிக் கடல்'' என்று எந்தக் கடலை வர்ணிக்கின்றார்கள்?
பசுபிக்கடல்

கணேசலிங்கம் விஷ்ணுகா,
தரம் - 7 சி, யா/ இந்து மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## விடுகதை சொல்லப்போறோம்...

1. முகத்தின் மேலே கைகள்; முள்ளைப் போலே கைகள்; ஓடிப்போகும் ஒரு கை தான். மெல்ல நகரும் மற்றொரு கை. அது என்ன?
கடிகாரம்

2. அடித்து வைத்த இடத்தில் ஆடாமல் அசையாமல் இருக்கும். அனுதினம் பார்க்கப் பார்க்க ஆயுள் நாளைக் குறைக்கும். அது என்ன?
நாட்காட்டி

3. தலையிலே கிரீடமுண்டு அரசன் அல்ல; தளதளக்கும் மேனியுண்டு குமரி அல்ல; வீதிக்கு வருவதுண்டு விலையுமுண்டு; விரும்புகிற பல பேர்கள் உலகில் உண்டு. அது என்ன?
கத்தரிக்காய்

4. வாசலில் வண்ணப்பூ; வரிவரியாய் அழகுப் பூ; தினந்தினமும் வேறு பூ; தெளிவாகத் தோன்றும் பூ. என்ன பூ?
பூக்கோலம்

5. சுருட்ட முடியும் ஒடிக்க முடியாது; எடுக்க எடுக்க வளரும். அது என்ன?
தலைமுடி

6. விதவிதமாய்க் கதை சொல்லும். வேடிக்கைகள் பல காட்டும். வேடமிடும் பலர் அங்கே விதவிதமாய் மாறிடுவார். அது என்ன?
திரைப்படம்


7. வாய் வழியாய் நூல் எடுப்பான் வித்தைக் காரனல்ல; வலை விரித்து வாழ்ந்திடுவான் வேடனல்ல; வகை வகையாய் உயிர் குடிப்பான் எமனுமல்ல; அவன் யார்?
சிலந்தி

8. வாய்க்கால் கரை ஓரம்; வகைவகையாய் ஆட்களங்கே; செத்துப் போனவனைக் காட்டிச் சாகப் போகிறவனைப் பிடிக்கின்றார். அது என்ன?
தூண்டில் மீனும் புழுவும்

சு.விஜிதா

## மாணவர் தூரிகை

சு.விஜிதா,
தரம் - 8 ஏ,
யா/ மகாஜனக் கல்லூரி.



சு.பங்கஜா
தரம் - 7
சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி


## தியாகராசா மாணிக்கம்

சின்னாலடி - காரைநகர்

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 04.11.1936 |
| மறைவு | : | 26.08.1983 |
| திதி | : | 19.08.2008 |

அம்மா! நீ எம்மை பிரிந்து சென்று இருபத்தைந்து ஆண்டுகள் கடந்தாலும் நீங்கவில்லை எம்மனதைவிட்டு உம் நினைவுகள். எம் வாழ்க்கைக்காக உம்மையே அர்ப்பணித்த எம் அன்பு அன்னையே, நல்ல வழிகாட்டியாய், எம் நல்வாழ்வுக்கு உற்ற துணையாய், பாசமுடன் திகழ்ந்தவரே உம் ஆத்மா சாந்தியடைய எம்பெருமானை மனதார பிரார்த்திக்கின்றோம்...

# 8ஆம் மாதநினைவு



திரு

## தியாகராசா மகேஸ்வரன்

சின்னாலடி - காரைநகர்


(முன்னாள் இந்துகலாசார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்)

| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 10.01.1966 |
| மறைவு | : | 01.01.2008 |
| திதி | : | 25.08.2008 |

தகவல் : S. T. பரமேஸ்வரன், 5/C, பெரேரா லேன், கொழும்பு 06.
சின்னாலடி - காரைநகர்

இன்று (24.08.08) ஞாயிற்றுக்கிழமை
அன்னார்களின் நினைவையொட்டி தெகிவளை விஷ்ணு ஆலயத்தில்
1008 சங்காபிஷேகம் நடைபெற்று பின் மதியம் அன்னதானம் வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் முத்திரை பதித்த மூத்த எழுத்தாளர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த "அன்புமணி" என்று அறியப்படும் இரா.நாகலிங்கமும் ஒருவர்.

1952 ஆம் ஆண்டிலேயே எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்த அவர் சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம் ஆகியவற்றில் கைதேர்ந்தவர். தமிழகச் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இலங்கை யில் உள்ள பல பத்திரிகைகளிலும் நிறையவே எழுதியவர். கிழக்கிலங்கையின் முன்னோடி எழுத்தாளரான அன்புமணி, மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தை நிறுவியவர். இளம் எழுத்தாளர்கள் பலரை அங்கு ஊக்குவித்து வளர்த்தவர். மட்டக்களப்பில் பலர் எழுத்தாளர்களாவதற்கு உந்துசக்தியாக விளங்கியவர்.

மட்டக்களப்புப் பிராந்தியத்திய மக்களின் வாழ்க்கை முறைகளையும் பாரம்பரியங்களையும் எழுத்துக்களின் மூலம் படம் பிடித்துக் காட்டுவதில் கைதேர்ந்தவர் அன்புமணி.

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அரசாங்க சேவையாளராக நீண்ட காலம் பணியாற்றினார். உதவி அரசாங்க அதிபர், மாகாண சபை உள்துறை உதவிச் செயலாளர் ஆகிய உயர்பதவிகளையும் வகித்திருக்கிறார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "இல்லத்தரசி" 1992 ஆம் ஆண்டில் வெளிவந்தது. "ஒரு தந்தையின் கதை" என்ற நாவல் 1989 ஆம் ஆண்டிலேயே பிரசுரமாகிவிட்டது.

இலங்கைக் கலைக்கழக நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். "தமிழ்மணி" விருது மற்றும் உயர் விருதுகளும் இவரது பல்முகத் திறமைகளை வெளிப்படுத்துகின்றன. "இல்லத்தரசி" சிறுகதைத் தொகுதியில் அடங்கும் "பாடும் மீன்" 1958 ஆம் ஆண்டில் அவரால் எழுதப்பட்டதாகும்.

# பாடும் மீன்

சிறுகதை

பௌர்ணமி நிலவு பால்போல் காய்ந்து கொண்டிருந்த அந்த வேளையில் மட்டக்களப்பு ஏரியின் குறுக்கே படுத்திருக்கும் பிரம்மாண்டமான கல்லடிப்பாலம் வெள்ளி மெருகு பெற்றுத் திகழ்ந்தது. நிலவில் ஒளிரும் பரந்த நீர்ப்பரப்பு, சுற்றிவர உள்ள தென்னஞ் சோலைகளின் குளுமையான காட்சி, சில்லென்று வீசும் மெல்லிய தென்றல் எல்லாம் ஒருங்கு சேர்ந்து மனதைக் கிறுகிறுக்கச் செய்தன.

"ஆகா! என்ன அற்புதமான காட்சி!" என்றேன் நான் மனவெழுச்சியால். எங்கள் ஓடம் இப்போது பாலத்தின் கீழே வரிசையாக உள்ள பெரிய இரும்புத் தூண்களில் ஒன்றைத் தொட்டுக்கொண்டு சென்றது. "அதைவிட அற்புதமானது நான் சொல்லப் போகும் கதை" என்று கூறிவிட்டு அந்த விசித்திரமான கதையைச் சொல்லத் தொடங்கினான் எனக்கு முன் உட்கார்ந்திருந்த நண்பன் சேகர்.

* * *

பீ.ஏ. பரீட்சை எழுதி முடித்ததும் நீண்ட விடுமுறையில் ஊருக்கு வந்தேன். இந்த லீவை வீணாகக் கழிப்பதை விட ஏதாவது வேலை பார்த்தால் தேவலையே என்று மற்றவர்களைப் போல் நானும் நினைத்தேன்.

என்னுடைய எண்ணம் சீக்கிரமே செயல்பட்டுவிட்டது. நீர்ப்பாசன இலாகாவின் மட்டக்களப்பு கிளையில் தற்காலிக உத்தியோகம் கிடைத்தது. சொற்ப சம்பளம்தான். என்றாலும் அதில் எனக்கு அதிருப்தியில்லை. இந்த உத்தியோகம் கொஞ்ச நாள்தானே. பரீட்சை ரிஸல்ட் வந்துவிட்டால் அப்புறம் 'பக்கா' உத்தியோகம் என்று நினைத்துத் திருப்திப்பட்டேன். மேலும் என்னுடைய நண்பன் ஒருவன் இந்த ஏரிக்கு அந்தப்புறமுள்ள கல்லடி என்ற ஊரில் இருந்தான். அவனுடைய உதவியால் அங்கேயே ஒரு வீடு மிகச் சொற்ப வாடகைக்கு எடுக்க முடிந்தது. நண்பனை அடிக்கடி சந்தித்து பொழுதைக் குஷியாகக் கழிக்க முடிந்ததால் சொந்த ஊரைவிட்டு பல மைல் தூரம் வந்திருந்த வித்தியாசமும் தெரியவில்லை.

எனக்கு அந்த இடம் பிடித்துப் போனதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. அதுதான் இந்த ஏரியில் உள்ள பாடும்மீன்.

எனவே இந்த ஊருக்கு வந்ததும் முதற் காரியமாக அந்தப் பாடும்மீன்கள் விஷயத்தில் தான் இறங்கினேன். என் நண்பன் குமார் அதைப் பற்றிய முழு விவரங்களையும் எனக்குச் சொன்னான்.

* * *

ஒரு நாள் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்துவிட்டு சைக்கிளில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். அந்தப் பௌர்ணமி நிலவில் அப்படி வருவது உற்சாகமாக இருந்தது. இந்தப் பாலத்தருகில் வந்ததும் வெண்ணிலவில் குளித்திருந்த சுற்றுப்புறக் காட்சி என் உள்ளத்தைக் கவர்ந்தது. சற்று நின்று அந்தக் காட்சியை அனுபவிக்கவேண்டும்போல் இருந்தது. அப்படியே சைக்கிளை ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு இந்தப் பாலத்தில் சாய்ந்து கொண்டு இயற்கை அழகைப் பருகிக் கொண்டிருந்தேன்.

அப்போது எங்கிருந்தோ வீணையின் ஒலி மெல்லத் தவழ்ந்து வந்தது. உற்றுக் கவனித்தேன். அந்த ஒலி பாலத்துக் கம்பியில் சாய்ந்து கொண்டிருந்த என் காதருகிலேயே கேட்டது. ஆகா! என்ன இனிமையான இசை! இது எங்கிருந்து வருகிறது? திடீரென்று எனக்குப் பாடும் மீன்களின் ஞாபகம் வந்தது. ஆம், ஆம் இது பாடும் மீன்களின் இசைதான். சந்தேகமேயில்லை. எத்தனை நேரம் அப்படி நின்றேனோ தெரியாது. திடீரென்று பாலத்தின் மறுபுறத்திலிருந்து தடாரென்று ஏதோ ஏரியில் விழுந்த மாதிரிக் கேட்டது.

சட்டென்று அந்த இடத்துக்கு ஓடினேன். கீழே குனிந்து பார்த்தபோது நீரில் குமிழி வந்து கொண்டிருந்தது. ஒரு மனித கை அதில் சுழன்றது தெரிந்தது. எனக்கு யோசிக்க அவகாசம் இருக்கவில்லை. அயலாரைக் கூவி அழைக்கலாமென்றாலும் சப்தம் அந்த ஏரிக்கு வெளியே கேட்காது. முன்பின் யோசியாமல் உடனே நீரில் குதித்துவிட்டேன்.

அந்த உருவத்தைத் தூக்கிக்கொண்டு வரும் போதே எனக்கொரு சந்தேகம் உதித்தது. கரை சேர்ந்ததும் என் சந்தேகம் சரியாகவே போய் விட்டது. அப்படி நான் தூக்கிக்கொண்டுவந்தது ஒரு பெண். அதுவும் ஓர் இளம் பெண்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். சற்றுத் தூரத்தில் அடர்ந்த தென்னஞ்சோலைக்குள் ஒரு குடிசை இருப்பது நிலவொளியில் தெரிந்தது. அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு அந்தக் குடிசைக்குச் சென்றேன். அது செம்படவர்கள் அவ்வப்போது வந்து தங்குவதற்காகத் தற்காலிகமாக அமைத்த ஓர் ஓலைக் குடில். வெறுமனே கிடுகுகளைச் சாத்தியிருந்தது. அவர்கள் எப்போதோ அங்கு வந்துவிட்டுப் போய்விட்டார்கள் போலிருக்கிறது. இனி என்ன செய்வது? நேரமோ போய்க் கொண்டிருக்கிறது. உடனே ஒரு முடிவுக்கு வந் தேன். காலேஜில் படித்த முதலுதவி அறிவைக் கொண்டு அவளைத் தரையில் கிடத்தி விட்டு மூர்ச்சை தெளிவிப்பதற்கான முதலுதவியைச் செய்தேன்.

அந்தப் பெண் கண்ணைத் திறந்ததும் அப்படி மலர மலர விழித்தது ஆச்சரியத்தினாலா அல்லது பயத்தினாலா என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை. நடந்திருக்கும் சம்பவத்தை நம்ப முடியாதவள் போல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். அளவில்லாத வியப்பு அவள் கண்களில் தெரிந்தது. நான் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் மௌனமாக நின்று கொண்டிருந்தேன்.

பின்பு, "நீங்களும் இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டாள். எனக்கு மேலே பேச ஓடவில்லை. அப்படியானால் நான் அவள் உயிரைக் காப்பாற்றியது தவறா? அல்லது அவள் என்னை தவறாக விளங்கிக் கொண்டாளா?

அந்தப் பெண்ணே மேலும் தொடர்ந்து பேசினாள். "நீங்கள் மௌனம் சாதிப்பது எனக்குப் புரிகிறது. நாம் செய்த மகத்தான உதவியை மறந்து இப்படிக் கேட்கிறாளே என்று நினைக்கிறீர்கள். என் உயிரைக் காப்பாற்றியதால் ஏதோ மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. சில சமயம் நன்மை என்று நாம் நினைக்கும் காரியங்களே தீமையாக முடிந்து விடுகின்றனவல்லவா...?"

அவள் படித்தவள் என்பது இந்தப் பேச்சிலிருந்து தெரிந்தது.

"அப்படியானால் நீங்கள் தற்கொலை செய்யத் துணிந்தது நல்ல காரியம் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டேன் நான் விட்டுக் கொடுக்காமல்.

"என்னைப் பொறுத்தவரையில் அதைவிடச் சிறந்த காரியம் எதுவும் இல்லையெனச் சொல்வேன்."

"இந்த உலகத்திலேயே வெறுக்கத்தக்க ஒரு காரியம் உண்டென்றால் அது தற்கொலை செய்து கொள்வதுதான். எந்த நிலையிலும், எக்காரணம் கொண்டும் கோழைத்தனமான இந்தச் செயலைச் செய்யக்கூடாது என்று படித்த பெண்ணாகிய உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நீங்களே இது சம்பந்தமான அறிவுரைகளைப் படித்திருப்பீர்கள்."

"அதற்குள் நான் படித்த பெண் என்று வேறு கண்டு பிடித்துவிட்டீர்களா? நானும் வெகு காலம் வரை இந்த வேதாந்தத்தைத்தான் நெட்டுருப் போட்டுக் கொண்டிருந்தேன். பிறருக்கும் உபதேசித்து வந்தேன். ஆனால் அனுபவத்தில் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லை எவருக்கும் அப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம். என்னுடைய நிலைமையை உங்களுக்குப் புரிய வைக்கிறேன். அப்புறம் நீங்களே சொல்லுங்கள்."

இப்படிக் கூறிவிட்டு அந்தப் பெண் தன் கதையைச் சொல்லத் தொடங்கினாள்:

"இதோ, இந்தப் பாலத்துக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கும் கல்லடி என்ற கிராமத்தில்தான் நான் இருக்கிறேன். ஏழைக் குடும்பம். அதனால் எனக்குப் படிக்கக் கூடிய திறமை இருந்தும் எஸ். எஸ்.ஸி. படித்துக் கொண்டிருக்கும்போதே என்னை நிறுத்திவிட்டார்கள். ஏனென்றால்

(10 ஆம் பக்கம் பார்க்க)



# நல்லவர்களுக்கே அதிக துன்பம் வருவது ஏன்?

இன்று நேற்று வந்த கேள்வி அல்ல இது: சீனாவில் பூகம்பம். 100, 000 பேர் பலி. அப்பாவிகள் பலர் உடல் உறுப்புக்களை இழந்து, வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படும்படி செய்துவிட்டது சில நொடிகளே நடுங்கிய நம் பூமி.

புயலால் மியான்மரிலும் லட்சம் பேர் உயிரிழந்தனர். தப்பித்தவர்கள் வீடிழந்து, பொருளிழந்து, உறவிழந்து பெரும் துயரில் வாடுகின்றனர். அப்படி இறந்துபோக அந்த அப்பாவிகள் செய்த குற்றம்தான் என்ன?

தனிமனித வாழ்விலும், குடும்பங்களிலும் பதறவைக்கும் விபத்துகள் ஏராளம். நல்லவர், தர்மநெறி பிறழாத வாழ்க்கை நடத்துபவர் திடீரென தீராத நோயில் படுத்துவிடுகிறார். குடும்பமே நிலை குலைந்து விடுகிறது. ஏன் இப்படி நடக்கிறது?

நாணயஸ்தர் என்று பெயரெடுத்த வியாபாரி ஏமாற்றப்பட்டு திடீரென்று ஏழையாகிறார். கடன்சுமையால் அவமானப்பட்டுத் தற்கொலையே செய்து கொள்கிறார். செய்யாத குற்றங்களுக்குப் பழிச்சொல் ஏற்றுத் தண்டனைக்கு உள்ளாகும் நல்லவர் பலர்.

மகன் வெளிநாடு சென்று படிப்பதற்காகச் சொத்துக்களை விற்று அனுப்பிய பெற்றோர் முதிய வயதில் வெறுமையிலும் தனிமையிலும்!

கர்ப்பத்திலேயே குறையுள்ள குழந்தைகளைப் பெற்ற நல்ல பெற்றோரின் எண்ணிக்கையை எண்ணிவிட முடியுமா?

குழந்தையைப் பார்த்துப் பார்த்து வளர்த்து, வாலிபத்தில் அவனை விபத்தில் பறி கொடுத்து, முதுமைக் காலத்தில் நடைப்பிணமாகத் தவிக்கும் பெற்றோரின் மனக்கஷ்டங்கள் தாம் எத்தனை! மக்களுக்குப் பயன்படும் தரமான சினிமா எடுத்த படத் தயாரிப்பாளர் கடன் தொல்லை யில் மாட்டிக் கொள்கிறார்.

லஞ்சம் வாங்காத நேர்மையான அரசு அதிகாரிக்கோ பிழைக்கத் தெரியாதவர் என்று பட்டம்! அவரது நேர்மைக்குத்தான் மேல் மட்டத்திலும் கீழ் மட்டத்திலும் எத்தனை விதமான தொல்லைகள்!

இப்படி நல்லவர்களுக்கு வரும் துன்பங்களைப் பட்டியலிட முடியாது. 'போதுமடா சாமி' என்று தலையில் கைவைத்து மூலையில் உட்கார வைக்கக் கூடிய தருணங்கள் பலரது வாழ்விலும் பலப்பல.

### தனி மனிதனின் துன்பங்கள் மூன்று வகை

ஒருவருக்குத் துன்பங்கள் வந்ததாலேயே அவர் நல்லவர் என்று சொல்லிவிட முடியாது. நல்லவர்கள் என்று நாம் இங்கு குறிப்பிடுவது பிறருக்குத் தீங்கு செய்யாமல், தர்மத்தோடு வாழ்ந்து கொண்டு ஆன்மீகத்தில் முன்னேற நினைக்கும் சாதகர்களையும் பக்தர்களையும் தான்.

**முதல்வகைத் துன்பம்:** நம் ஆசைகளாலும் பழக்க தோஷத்தாலும் உந்தப்பட்டுச் செய்யும் செயல்களால் துன்பத்திற்கு உள்ளாவது. குடி, போதைப்பழக்கம், தீயோர் நட்பு, அது தரும் அவலம் முதலியவை.

**இரண்டாம் வகைத் துன்பம்:** நாமாகவே நமது கவனக்குறைவால், அலட்சியப் போக்கால் இழுத்துவிட்டுக் கொள்வது.

உடற்பயிற்சியின்மை, உணவுக் கட்டுப்பாடின்மை, அளவுக்கு மீறிய உழைப்பு அல்லது உழைப்பின்மை என்பது போன்ற கவனக் குறைவுகளாலும் நோய்களும் துன்பங்களும் வர வாய்ப்பு உள்ளன.

சாதாரண மக்களுக்குத் துன்பம் வந்தால் அவர்கள் மது, மாது என்று பல வழிகளில் சென்று துயரை மறக்க முயல்கின்றனர்.

பலர் தங்களது மனவேதனை நீங்குவதற்கு மனநல நிபுணர்களை நாடுகின்றனர். அவர்களிடம் தங்கள் மனக் குறைகளைக் கொட்டி விடுகின்றனர்.

ஆனால், சில நாள்களிலேயே மீண்டும் அவர்களுக்குப் பிரச்சனை வந்துவிடும். ஏன்? அடிப்படைக் காரணத்தை அறிந்து தங்களுள் அதைச் சரிசெய்து கொள்ளாததால்தான். கவலையாலும் துன்பத்தாலும் சிதறுண்டு இருக்கும் மனதை திரட்டி மனநல நிபுணர்களிடம் நாம் கொட்டியதும் நம் மனம் தற்காலிகமாக [illegible]

ஆனால், [illegible] முடிவதில்லை. அப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு துன்பத்தின் போதும் ஒவ்வொரு குருவைத் தேடி ஆசிரமங்களிலோ, பாவ மன்னிப் பிறகாக சர்ச்சிலோ ஏறி இறங்கி அலைகின்றனர்.

குறைகளைக் கூறி அழுவதில் சிலருக்கு ஆனந்தம். மனநல மருத்துவரிடம் மனதில் இருப்பதைக் கொட்டுவதை ஏன் இறைவனிடம் செய்யக்கூடாது?

**மூன்றாவது வகைத்துன்பம்:** இவை நாமாக வரவழைத்துக் கொள்ளும் துன்பமல்ல. தாமாக, தடுக்க இயலாத விதிவசத்தால் வருபவை. முற்பிறவிகளிலோ, இப் பிறவியில் எப்போதோ நாம் அறிந்தோ, அறியாமலோ செய்த தீய செயல்களால் வருபவையே இந்தத் துன்பங்கள் என்பது இந்து மதத்தின் பலமான நம்பிக்கை.

ஆணிமாண்டவ்ய தவமுனி ஏன் கழுவில் ஏமாற்றப்பட்டார்? ருக்மாங்கதன் ஏன் குஷ்டரோகி ஆனார்? பார்வையற்ற திருதராஷ்டிரன், தான் குருடனாக அரசாள்வதற்குக் காரணம் என்ன என்று கண்ணனைக் கேட்டான்.

பல ஜன்மங்களுக்கு முன்பு செய்த கொடுமை, நீண்ட காலம் கழித்துப் புண்ணியங்கள் குறைந்த நிலையில், அவனைக் குருடனாக்கியதை திருதராஷ்டிரன் கண்ணன் மூலம் அறிந்தான்.

விது மகராஜ் ராமகிருஷ்ண மடத்துத் துறவி. உடல் நலமில்லை என்றால் அவரிடம் மருந்து கேட்பார்கள். அவர் ஹோமியோபதியில் பட்டம் பெறவில்லை. இருந்தாலும் புத்தகத்தின் உதவியுடன் மருந்தைத் தீர்மானிப்பார்; அன்னை ஸ்ரீசாரதாதேவியின் புகைப்படத்தின் கீழ் மருந்தை வைத்துப் பிரார்த்தித்து நோயாளிக்குத் தருவார். நோயாளி உடனே குணமடைவார்.

தெய்வ நம்பிக்கை எனும் பலத்தால் பலருக்கு உதவிய விது மகராஜ்....., தமது 40 ஆவது வயதிலேயே புற்றுநோயால் இறந்தார்.

இப்படியான துன்பங்களைக் காணும் போது 'நல்லவர்களுக்கு ஏன் அதிக துன்பம் வருகிறது?' என்ற கேள்வி நமக்குள் பிறக்கிறது. இக்கேள்வி இன்று நேற்று எழுந்த [illegible]

நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (ஓகஸ்ட் – 2008)

## எப்போது விடியும்......?

வானம் வெளுத்ததனால்
வையகம் சிவந்தது
கதிரவன் விடியலுக்காய்
காத்திருந்தன உயிர்கள் எல்லாம்...

அன்று ....
ஏர்பூட்டி உழும்தோழன்
ஏற்றமுடன் வாழ்வதற்கு
கதிரவனின் விடியலுக்காய்
காத்திருந்தான் பூமிதனில்....

ஆனால் இன்று ....
தேசத்தில் பிறந்த மனிதரெல்லாம்
தேடி அலைந்து காத்திருந்தனர்
கதிரவனின் விடியலுக்காய் மட்டுமல்ல
கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நிற்கும்
சமாதான விடியலுக்காய் ....

தொலைந்து போன உறவுகளும்
கலைந்து போன கனவுகளும்
கண்ணுக்கு எட்டிய தூரத்தினில்
காணாமல் போனதுவோ ....

கண்ணில் ஏக்கமுடன்
காரிருளின் மத்தியினில்
எண்ணிறைந்த கனவுகளுடன் -
விடியலுக்காய்
எதிர்பார்த்துக் காத்திருப்போம்

காற்றே ஒரு கணம் நில்லாயோ?
காத்திருக்கும் எமக்குப் பதில் சொல்லாயோ?
கூடி வரும் மேகமது கலைந்து - எமை
நாடி ஒரு விடியலும் வாராதோ?

தோப்போடு தோப்பாய் இருந்த நாம்
தோப்பின்றி தனிமரமாகித் தவிப்பதேன்
சொல்லு?

அப்பு, ஆச்சி, மாமன், மச்சான் என
அன்போடு இருக்கும் உறவுகள் தேடி
இருளினில் அலைகின்றோம்
எப்போது விடியும் அந்த விடியல்?

தென்னை மரத்தோப்பினிலே
தேக்கு மரக் கட்டிலிலே
அந்தி சாயும் பொழுதினிலே
ஆனந்தமாய் இருந்ததென்ன
வாய் சிவக்க வெற்றிலை போட்டு
வயிறார உண்டு மகிழ்ந்து
வாய்கிழியச் சிரித்து மகிழ்ந்து - இன்று
வாய்மூடி மௌனமானது ஏன்?

மண்வெட்டியால் மறிச்சுக்கட்டிய
விளைச்சலெல்லாம்
மலைபோல் எழுந்து வீடுகள் ஆகின -
அன்று
வீடுகள் எல்லாம் மண்ணோடு சாய
விளைநிலங்கள் தரிசுகளாகின - இன்று
என்று மாறும் இந்நிலை
எப்போது விடியும் அந்த விடியல் ...

இணுவையூர்
அ.ஆனந்தலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் மீன்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என் அண்ணாவை மேற்கொண்டு படிப்பிக்க வேண்டியிருந்தது. இதனால் எனக்குச் சந்தோஷமே.

அண்ணா படித்து ஒரு குமாஸ்தா உத்தியோகத்தைச் சம்பாதித்துக் கொண்டதும் என் பெற்றோர்கள் மகிழ்ந்தார்கள். குடும்பக் கஷ்டமும் ஓரளவு குறையத் தொடங்கியது. ஆனால் ஒரு புதிய கவலை என் பெற்றோரைப் பிடித்துக் கொண்டது. அதாவது என்னை..... என்னை..... ஒரு நல்ல இடத்தில் கொடுத்துவிட்டு விலகிவிட வேண்டும் என்பதுதான். ஓர் ஏழைக் குடும்பத்தில் இது கவலைக்குரிய விஷயம்தானே?

எனக்கு ஒரே வருத்தமாக இருந்தது. நம் மால் இவர்கள் சந்தோஷம் எல்லாம் பறிபோகிறதே என்றுதான். அதனால் கல்யாணமே செய்து கொள்வதில்லை என்று தீர்மானித்தேன். இதை வெளிப்படையாகவும் அவர்களிடம் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் என் பேச்சைச் சட்டை செய்யவேயில்லை. அசட்டுப் பெண் என்று என்னை வர்ணித்துவிட்டு அவர்களுடைய புத்திசாலித்தனமான கவலையிலேயே மூழ்கிக் கிடந்தார்கள். நான் மட்டும் என்னுடைய சங்கல்பத்தை மேலும் திடமாக்கிக் கொண்டேன்.

என்னுடைய திடசங்கல்பமெல்லாம் ஒரு நாள் திடீரென்று தவிடுபொடியாகிவிடும் என்று நான் கற்பனையில் கூட எண்ணிப்பார்க்கவில்லை. ஒரு புதிய மனிதரின் குறுக்கீட்டால் ஒரே நாளில் என் மனவுறுதி தளர்ந்தது. பெற்றோரின் எண்ணமே சரியென்றுபட்டது. அவரைப் பற்றி உங்களிடமே நான் வர்ணிக்க விரும்பவில்லை. என் மனம் மட்டும் அதை அறிந்து கொண்டால் போதும் என்று நினைக்கிறேன்.

தினமும் நான் அவரைச் சந்திப்பேன். ஆனால் அவர் என்னைப் பார்க்கமுடியவில்லை. ஏனெனில் நான் 'அடக்கமான குடும்பப் பெண்' ஆக இருந்தேன்.

என் மனோரதம் நிறைவேற வேண்டும் என்று எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டேன். பெற்றோரிடம் இதை நேரே தெரிவிக்கப் பயமாயிருந்தது. அதனால் அண்ணாமூலம் தெரிவிக்கலாம் என்று நினைத்தேன். மெல்ல அண்ணாவிடம் என் மனதிலுள்ளதை வெளியிட்டேன். அவன் முகம் ஒரு கணம் பிரகாசித்தது. ஒரே கணம் தான். ஆனால் அடுத்த கணம் அதில் எல்லையில்லாத சோர்வும் ஏக்கமும் குடிகொண்டுவிட்டது.

''எட்டாத பழத்துக்கு ஆசைப்பட்டுவிட்டாயே சீதா!'' என்று ஆதங்கத்துடன் கூறிவிட்டு மேலும் விவரமாகச் சொன்னான்:

அவர் பெரிய பணக்காரரின் மகனாம். அவர்கள் அந்தஸ்திற்கும், எங்கள் அந்தஸ்திற்கும் சரிப்பட்டு வராதாம். அதனால் அந்த எண்ணத்தை நான் அடியோடு மறந்து விடவேண்டுமாம்.

என் இதயத்தில் உருவாகியிருந்த இன்ப மாளிகை அந்த நிமிஷமே தகர்ந்து வீழ்ந்தது. இதயம் அற்றுச் சூனியமாகிவிட்டது போல் இருந்தது. அந்த ஏமாற்றத்தை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

இத்தனைக்கும் அவர் என் அண்ணாவின் நண்பர். எங்கள் வீட்டுக்கும் அடிக்கடி வந்திருக்கிறார். அப்படியிருந்தும் அண்ணா அவரிடம் இதையிட்டுக் கேட்க வெட்கப்பட்டான். பெற்றோரிடமும் அவன் இதைப்பற்றிச் சொல்லத் துணியவில்லை. எந்த விஷயத்தினால் அண்ணாவுக்கும் பெற்றோருக்கும் மனக் கவலையைக் கொடுக்கக் கூடாது என்று விரும்பினேனோ அந்த விஷயத்தினால் நானே அவர்கள் கவலையை அதிகமாக்கிவிட்டேன்.

அண்ணா எவ்வளவோ புத்திமதி சொன்னான். ''கதைகளிலும் காவியத்திலும் வரும் காதலை நிஜ வாழ்க்கையில் புகுத்தி வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கிக் கொள்ளாதே சீதா'' என்றான்.

நானும் எவ்வளவோ யோசித்தேன். ஆனாலும் என் மனதை மாற்றமுடியவில்லை. என் பிடிவாதத்தைக் கண்ட அண்ணா மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான்.

விஷயம் எப்படியோ என் பெற்றோருக்கும் தெரிந்துவிட்டது. என்னை ரொம்பவும் கண்டித்தார்கள். விஷயம் முற்றிவிடுவதற்குள் இதற்கு முடிவு கட்டிவிடுவதென்று அவர்கள் தீர்மானித்தார்கள். பாவம் என் மனநிலையை எப்படி அவர்கள் உணர்வார்கள்? முடிவு கட்டிவிடத் தீர்மானித்ததைச் சீக்கிரமே செயலில் காட்டிவிடத் துணிந்தார்கள் என் பெற்றோர்கள். இதற்கான அறிகுறிகள்அவ்வவ்போது தென்பட்டன. இனியும் தாமதித்தால்விஷயம் விபரீதமாகிவிடும் என்று நினைத்தேன்.

இந்த இக்கட்டிலிருந்து தப்பவேண்டுமானால், என் பெற்றோரையும் அண்ணாவையும் கவலைப் படுகுழியிலிருந்து மீட்க வேண்டு மானால், நானும் மனச்சாந்தி அடையவேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அந்த ஒரே வழி இதுதான்.

அன்று இரவு பேச்சுவார்த்தைகள் அதிகமாயிருந்தன. தங்கள் நாணயத்தைக் காற்றிலே பறக்கவிட வேண்டாமென்று என் காலில் விழாத குறையாகக் கேட்டுக் கொண்டார்கள் என் பெற்றோர்கள். எனக்கு அழுகையே வந்துவிட்டது. இரவு வெகுநேரம் வரையும் தேம்பித் தேம்பி அழுதேன். கடைசியில் இந்த முடிவுக்கு வந்தேன். எல்லோரும் உறங்கிய பிறகு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதி அண்ணாவின் தலைமாட்டில் வைத்து விட்டு வந்துவிட்டேன்.

இப்பொழுது சொல்லுங்கள் ''நான் செய்தது தவறா? நீங்கள் செய்தது தவறா?''

கதையை முடித்தாள் அந்தப் பெண். என் உள்ளம் உருகிவிட்டது. ஐயோ இந்தப் பெண் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள். ஆண்டவனே நீயாவது இவள் வேதனையைத் தீர்த்திருக்கக் கூடாதா? அவள் பால் எனக்கு ஏற்பட்ட அனுதாபம் எல்லாம் அன்பாக மாறிவிட்டது. நான் சொன்னேன்:

''அம்மா, நீங்கள் செய்தது சரியோ தவறோ என்று என்னால் சொல்லமுடியாது. ஆனால் நான் செய்தது மட்டும் சரியென்று நிச்சமாகச் சொல்வேன்.'' அவள் ஆச்சரியப்பட்டாள்.

''ஆமாம் சீதா. பெயருக்கேற்ற பெண் நீ. ஆனால் உன் உள்ளத்தைக் கவர்ந்த அந்தப் புண்ணியவான் ஒரு கல்நெஞ்சன். உன் அண்ணா ஒரு முட்டாள். பெற்றோர் அவனிலும் பெரிய மூடர்கள். எல்லோருமாகச் சேர்ந்து உன் இளம் உள்ளத்தைக் குதறிவிட்டார்கள். நான் இப்படிச் சொல்வதற்காக என்னை நீ மன்னிக்க வேண்டும். நான் மட்டும் அந்த அவராயிருந்தால் என் பெற்றோரைஎல்லாம் உதறித் தள்ளிவிட்டு உன்னை மகிழ்வித்திருப்பேன்.''

''அவரைக் குற்றம் சொல்வதற்கும் இடமில்லை. ஏனென்றால் அவர் என்னைப் பார்க்கவுமில்லை. நான் என் உள்ளத்தை அவரிடம் திறந்து காட்டவும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படவில்லையே.''

''என்றாலும் உன் அண்ணன் அவனுக்கு அதைப் புரிய வைத்திருக்கலாம். இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை. உன் அண்ணா செய்யத் துணியாத காரியத்தை நான் செய்கிறேன். உன் உள்ளத்தில் இடம்பெற்ற அந்தப் பாக்கியசாலி யார், எங்கிருக்கிறார் என்று சொல். நான் அவரிடமும் அவர் பெற்றோரிடமும் பேசி உன் எண்ணத்தை நிறைவேற்றி வைக்கிறேன். என்ன தயக்கம் சொல்லு!''

''என்னைக் கேலி செய்கிறீர்களா?''

''சீதா, இது என் உள்ளத்திலிருந்து வரும் வார்த்தை. உன்னுடைய பரிதாபமான கதையைக் கேட்டதினால்தான் நான் இவ்வளவு தூரம் அக்கறை எடுத்துக் கொள்ளுகிறேன். சொல்லு.''

''சரி சரி. சொல்லிவிடுகிறேன்'' என்று கூறியவள் தலையைக் குனிந்துகொண்டே ''அவர் இப்போது என் பக்கத்திலேயே இருக்கிறார்'' என்றுகூறிவிட்டுகலங்கிய கண்களுடன் என்னைப் பார்த்தாள்.

அவள் பேச்சில் அர்த்தம் விளங்க எனக்கு ஒரு நிமிஷம் பிடித்தது. ''நானா?'' என்று என்னையுமறியாமலேயே அலறிவிட்டது என் வாய்.

''இல்லாவிட்டால், ஒரு பெண் தன் சொந்த விஷயங்களையெல்லாம் வேறு யாரிடமாவது சொல்லிக் கொண்டிருப்பாளா? உங்கள் நண்பர் குமாரின் தங்கை நான்'' என்றாள் சீதா தாழ்ந்த குரலில். அப்போது எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் ஒன்றுமே பேசமுடியவில்லை.

சீதாவே மீண்டும் பேசினாள். ''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் வற்புறுத்திக் கேட்டதால் என் மனதிலுள்ளதைச் சொன்னேன். உங்களுக்குக் கஷ்டமாயிருந்தால் தயவுசெய்து இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதீர்கள். என்னை இங்கேயே விட்டுவிட்டுப் போய்விடுங்கள். அதிகம் தாமதித்தால் அப்புறம் என் நோக்கம் நிறைவேறாமல் போய்விடலாம்.'' சீதாவின் குரல் தழுதழுத்தது. நான் குறுக்கிட்டேன்.

''என்ன பேச்சு பேசுகிறாய் சீதா? நான் அவ்வளவு பெரிய அதிஷ்டசாலியா என்பதை நம்பமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய பரிசுத்தமான இதயத்தில் இடம் பெறுவதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? இனி உன் மனோரதத்தை நிறைவேற்றி விட்டுத்தான் மறு காரியம்.''

''ஆனால் உங்கள் பெற்றோர்?......''

''அதைப்பற்றி நீ கவலைப்படாதே. உன்னைப் போன்ற ஒருபெண்ணுக்காகப் பெற்றோரைத் துறந்துவிடுவது அப்படியொன்றும் பிரமாதமில்லை. ஆனால் எனக்கு அந்தச் சங்கட மும் இல்லை. இந்த விஷயத்தில் என் பெற்றோர் எனக்குப் பூரண சுதந்திரம் அளித்துவிட் டார்கள்.''

கூம்பியிருந்த அவள் வதனம் இப்போதுதான் மலர்ந்தது. ''உண்மையாகவா? நான் அவ்வளவு பாக்கியசாலியா?'' என்று கேட்ட அவள் குரலில் மகிழ்ச்சி கொப்பளித்தது. அல்லி மலர் விரிவது போல் மலர்ந்த அவள் இதழ் நிலாவொளியில் மோகனமாகப் பிரகாசித்தது.

ஒரு நல்ல நாளில் சீதா என் வாழ்க்கைத் துணைவியாகிவிட்டாள்.

* * *

கதையை முடித்தான் நண்பன்.

உருக்கிவிட்ட வெள்ளிபோன்ற நீரில் எங்கள் படகு அசைந்தாடிக் கொண்டிருந்தது. மொத்தம் நான்கு பேர் படகில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். ஒவ்வொருவரும் நண்பனுடைய கதையைக் கேட்டுத் தங்கள் அதிசயத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

''ஆகா! இப்போது இந்தத் துடுப்பில் காதை வைத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறியபடியே தண்ணீருக்குள் போட்டிருந்த துடுப்பின் மறுமுனையை நீட்டினான் நண்பன் சேகர்.

நான் அதைக் காதில் வைத்துக் கேட்டேன். ஆகா! இசை! நண்பன் தன் கதையில் வர்ணித்தது போலவே அற்புதமான இசை!

சற்றுநேரத்தில் அந்த இசை எல்லோருக்கும் தெளிவாகக் கேட்டது. எல்லோரும் இந்த இசை நண்பன் கதையில் கூறியதுபோலவே இருப்பதாக அபிப்பிராயம் சொன்னார்கள். என் மனம் மட்டும் அந்த அதிசயமான சம்பவத்தைச் சுற்றியே இன்னமும் வட்டம் இட்டுக் கொண்டிருந்தது. அந்த அதிசயக் கதையை ஆப்த நண்பனாகிய என்னிடம் கூட அல்லவா இவ்வளவு நாளும் சொல்லாமல் இருந்துவிட்டான் சேகர்.

'' என் சேகர், இவ்வளவு நாளும் நீ எனக்கு உன்னுடைய காதல் கதையை சொல்லவே இல்லையே''.

''எனக்கும் இவ்வளவு நாளும் அந்தக் கதை தெரியாது. அதனால்தான் சொல்லவில்லை.''

எல்லோரும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துவிட்டோம். ''என்னப்பா புதிர் போடுகிறாய்?''

''ஆமாம். இப்போதுதானே அது என் கற்பனையில் உதித்தது.''

''என்ன? என்ன? என்ன சொல்கிறாய்?''

''அப்பா மணி, இந்த பாடும் மீன்களின் இசையைக் கேட்க விரும்புகிறவர்களுக்குப் பொறுமை நிறைய இருக்கவேண்டும். ஆனால் இங்கு வருகிறவர்களிடம் அது பூஜ்யம். அதனால் அப்படிப்பட்டவர்களுக்கும் பொறுமையை ஊட்டுவதற்கு இந்த வழியைத்தான் நான் கையாளுவது வழக்கம். இல்லாவிட்டால் தங்கள் வாழ்நாளிலேயே கிடைத்தற்கரிய அபூர்வமான இந்த இசை நிகழ்ச்சியை அவர்கள் தவற விட்டு விடலாம் அல்லவா'' என்றான் சேகர்.

அதை ஆமோதிப்பது போலவே கம்பீரமாக இருந்தது. அப்போது அங்கு எழுந்த பாடும் மீன்களின் கானாமிர்தமான இசை.

நன்றி: இல்லத்தரசி சிறுகதைத் தொகுதி

## சொற்சிலம்பம் - போட்டி இல: 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| | ■ | 9 | | 10 | ■ | 11 | |
| 12 | 13 | ■ | 14 | | 15 | | ■ |
| ■ | 16 | 17 | | ■ | | ■ | 18 |
| 19 | | | ■ | 20 | | 21 | |
| 22 | | | | ■ | 23 | | |
| | ■ | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### மேலிருந்து கீழ்

1. கௌதம முனிவரின் பத்தினி. இராமன் காலடி பட்ட தால் இவள் சாபம் நீங்கியது.
2. முனை.
3. இது பறிபோனால் மதிப்பும் பறிபோகும்.
4. வல்லமை மிக்கவன்.
5. பாதகம் அல்ல.
6. தங்குமிடம்.
10. இது குடியைக் கெடுக்கும்.
13. துன்பம்.
15. கிடைத்தற்கரிய சங்கு.
17. வன்னியில் அமர்ந்து மக்கள் துயர் துடைக்கும் பெண் தெய்வம்.
18. திரவியப்பொதி.
19. சேறு.
21. நண்பகலுக்குரிய வேளை.

### இடமிருந்து வலம்

1. பட்டறிவு.
5. திறப்பு.
7. பழுத்தல்.
8. அதரம்.
9. தள்ளிப்போ.
11. வேகம்.
12. சிறைப்பிடித்தல்.
14. உருவம்.
16. கூற்றுவன்.
19. நூல்/கொடி.
20. இணங்கு.
22. கொல்லன் பட்டறை.
23. நவீன்.
24. தைரியம்/வீரம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 24**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (03.09.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.24 இல் வெற்றிபெற்றோர் விவரம் 07.09.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 22 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

**இடமிருந்து வலம்**

(1) விசுவாசம். (5) உமி. (7) வட்டில். (8) மதகு. (9) சாடி. (10) லாவண்யம். (12) அபலை. (13) அடம். (14) உதவி. (16) அகம். (17) ஆரம்ப. (18) நாற்பக்கல். (19) திறன். (20) தம்.

**மேலிருந்து கீழ்**

(1) விவசாயி. (2) சுட்டி. (3) வாடி. (4) சல்லாபம். (5) உதயகீதம். (6) மிகும். (8) மண். (11) வலை. (12) அடம்பன். (13) அகற்ற. (14) உரல். (15) விபரம். (16) அநாதி. (17) ஆகவே.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 22 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** — **நாகேந்திரம் விரீசண்யா,**
தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

**2 ஆம் பரிசு** — **நவம் இயேசுசகாயம்,**
அன்னவாசா, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

**3 ஆம் பரிசு** — **செல்வராஜா சிந்துராணி,**
'மணல்' புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி.செல்[illegible],
'சாருஜா'
சிவன்கோயில் வீதி, புத்தூர்.

(2) மணிக்குமார் தர்ஷினி,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

(3) இ[illegible] இராசையா,
[illegible]கிராமின் கிறடிட்கொம்பனி,
சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.


(4) இ.பொ.இளமதி,
சம்மட்டியோலை,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

(5) ச.சிவானி,
தம்மளை,
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயநோய்ச் சிகிச்சையில் நவீன மாற்றங்கள் மரண பயத்தை போக்கும் புதிய சகாப்தம்

மார்புவலி வந்த அடுத்த சில நிமிடத்தில் மாரடைப்புக் கண்டு, திடீரென்று மரணமடைந்தவர்களை பார்த்திருக்கிறோம். ஆனால், இன்றோ கதை வேறுவிதமாகி விட்டது. மார்புவலி, மாரடைப்பால் யாரும் திடீரென்று மரணமடைவது குறைந்துள்ளது.



மருத்துவத்தில் ஏற்பட்ட அரிய முன்னேற்றங்கள் இ.சி.ஜி. , என்ற பயிற்சி மின்அலை வரைபடம், எக்கோ கார்டியோ கிராம் என்ற இதய எதிர்ரொலி வரைப்படம், இதய ஊடுருவல் பரிசோதனை என்ற அஞ்சி யோகிராம், கரோனரி அஞ்சியோகிராம், கொரோனரி இரத்தக்குழாய்,




பலூன் ஸ்ரென்ட் சிகிச்சை, சி.ஏ.பி.ஜி. , என்ற கொரோனரி இரத்தக் குழாய் மாற்றுச் சிகிச்சை, கொழுப்பு நிறைந்த தடித்த இரத்தத்தை தண்ணீர் போல மாற்றும் ஜிபி1பி, ஐபி2ஏ என்ற மருத்தும் குளோபிடிகிரால் என்ற மருந்தும், ஸ்டேட்டின் என்ற கொழுப்புக் கரையும் மருந்தும் இன்று திடீர் மரணத்தைத் தடுத்துள்ளது.

### மார்புவலி எப்படி வருகிறது?

இதயம் இயங்க பிராண வாயு தேவை. இந்த பிராண வாயு குறைவாகக் கிடைக்கும் போது, மார்பு வலி ஏற்படுகிறது. இதயத்திற்கு இரத்தத்தை எடுத்து செல்கிற கொரோனரி இரத்தக் குழாயை கெட்ட கொழுப்பு அடைத்து குறைவான இரத்தம் செல்கிறது.

இரத்தக் குழாய் உட்சுவரில் கெட்ட கொழுப்பு சேர்ந்து, 70 சதவீதம் அடைப்புத்தான் வலியைக் கொடுக் கும். நடக்கும் போது, வேலைசெய்யும் போது இதயம் அதிக இரத்தத்தை, வேலைச் செய்யும் உறுப்புகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளது. இதயம் இயங்க அடைபட்ட கொரோனரித் இதக் குழாய் முழுமையான இரத்தத்தைக் கொடுக்க இயலாது. இதனால் ஆஞ் சைனா மார்புவலி வருகிறது.

அடைபட்ட கரோனரி இரத்தக் குழாயில் மீதியுள்ள 30, 20 சதவீதத்தில் இரத்தம் உறைந்து முழு அடைப்பு ஏற்பட்டு, மாரடைப்பு ஏற்படுகிறது. இதில் கரோனரியின் இடது முதன்மைக் குழாய் அடைபட்டால், திடீர் மரணம் உடனே வீட்டிலேயே வரும். முன்கூட்டியே இதைக் கண்டுபிடிக்க இதய ஊடுருவல் பரிசோதனையில்தான் முடியும். மறைமுகமாக டி.எம்.டி., என்ற பயிற்சி, இ.சி. ஜி., எக்கோகார்டியோகிராபி என்ற இதய எதிரொலி வரைப்படம் மூலம் கண்டுபிடிக்கலாம்.

பேராசிரியர்: சு.அர்த்தநாரி
இதயநோய் நிபுணர்.

### மரணபயம் வேண்டாம்!

மாரடைப்பு கண்டவுடன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் பல நாள்கள் தங்கி சிகிச்சைப் பெற்று, ஊடுருவல் பரிசோதனை செய்து, அடைப்பை பலூன் ஸ்டென்ட் அல்லது பை-பாஸ் அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்து வீடு திரும்ப 20 நாள்கள் ஆகிவிடும். பணமும் அதிகம் செலவழிக்க வேண்டியுள்ளது. ஆனால், இன்றோ நிலை வேறு!

மாரடைப்புக்கு மூன்று நாள்கள் போதும். மாரடைப்பு கண்டவுடன், வீட்டிலிருந்து ஊடுருவல் இதயநோய் வல்லுநருக்கு போன் செய்து, உடனடியாக வீட்டு வாசலிலிருந்து காரிலோ, அன்புலன் சிலோ, ஊடுருவல் பரிசோதனை கூடமுள்ள மருத்துவமனைக்குப் புறப்பட்டு, தீவிர முதலுதவிப் பிரிவில், இ.சி. ஜி., டிரோட்-T CPK,LDH MB என்ற பரிசோதனைகளை செய்ய வேண்டும். இதை இதய ஊடுருவல் பரிசோதனையில் தேர்ச்சி பெற்றவர்களால் தான் முடியும். இரத்தகுழாய் அடைப்பு, இதய இயக்கம் முதலியவற்றை செய்ய வேண்டும்.

### கொரோனரி அடைப்புகள்

அடைப்பை கண்டறிந்து, மாரடைப்பு, மார்பு

## திடீர் மரணங்களைத் தடுப்பதற்கு உதவுகின்றன புதிய கருவிகள்

வலிக்கு காரணமான இரத்தக் குழாயைகண்டறிந்து, அதை உடனடியாக பலூன், ஸ்டென்ட் சிகிச்சை ஆரம்பிக்க வேண்டும். அஞ்சியோ பிளாஸ்டிக்கு உதவ நல்ல பயிற்சிப் பெற்ற டெக்னிசியன்கள் உடனிருக்க வேண்டும். நாம் செய்யும் சிகிச்சைக்கு ஏற்றாற் போல, முதலிலிருந்து கைடிஸ் குழாய், வழிக்காட்டிஒயர், பலூன், பிரசர்சாதணங்கள் நிலைப்பாட்டுக்கு ஏற்றாற்போல எடுத்துக் கொடுக்கவேண்டும். நமது வழிமுறை அறிந்து ஒவ்வொரு படியிலும் பலூன், ஸ்டென்ட் அதனளவு, அழுத்தம் முதலியவற்றை செயல்படுத்தி, செலுத்தி வைக்க உடனுக்குடன் உதவவேண்டும்.

அடைப்பில் இரத்தக் கட்டியை போக்க, ஜிபி IIபி, ஐபி IIஏ என்ற மருந்தை செலுத்த வேண்டும். அதன் பிறகு பலூன் போட்டு விரிவடையச் செய்து, பிறகு ஸ்டென்டுள்ள பலூன்கள் செலுத்தி, அழுத்தத்தை செலுத்தி, ஸ்டென்டை அடைப்புள்ள பகுதியில்வைத்து, பலூனை வெளியே எடுக்க வேண்டும். சோதனை அஞ்சியோ படம் எடுத்து அடைப்பு சரி செய்ததைக் காட்டவேண்டும்.

பலூன் ஸ்டென்ட் சிகிச்சைக்குப் பிறகு இரண்டு அல்லது மூன்று நாள்களில் வீடு திரும்பலாம்.

### ஸ்டென்ட் சிகிச்சை

இரத்தக் குழாயில் ஒரே இடத்தில் படராமல் இருக்கும் அடைப்பு, பெரிய விட்டமுள்ள குழாய்கள் (2.25 எம்.எம். இற்கு மேல்) 20மி. மீ., நீளமுள்ள அடைப்பு, ஒன்று அல்லது இரண்டு அடைப்பு, வயது முதிர்ந்தவர்கள் பை-பாஸ் அறுவை சிகிச்சைக்கு தகுதி யற்றவர்கள், இளம் வயதினர், 50 வயதுக்குள் பல அடைப்புள்ளவர்களுக்கு தற்போது ஏற்பட்டுள்ள அடைப்பினால் இதயம் செயலிழந்து போகும் நேரத்தில் ஸ்டென்ட் சிகிச்சை வைக்கலாம்.

### பை-பாஸ் சேர்ஜரி யாருக்கு?

அடிமரமாக உள்ள இடது முதன்மை ரத் தக் குழாய் அடைப்பு, பல குழாய்கள் அடைப்பு, இரத்தக் குழாய்களில் நீண்ட அளவு அடைப்பு இவை பை-பாஸ் சேர்ஜரிக்கு வழிவகுக்கும்.

(நன்றி: தினமலர்)

# பரீட்சைகளையே சிறப்பு நோக்கமாகக் கொண்ட இப்போதைய கல்வி மரபில் மாற்றம் வேண்டும்

*கே:* பல பதிப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்கள். பதிப்பு முயற்சிக்கான ஆரம்பக் களமென்று எதையாவது கருதுகிறீர்களா?

*ப:* மல்லாகத்தில் நடைபெற்ற பண்டித வகுப்பில் பயின்று கொண்டிருந்த காலத்தில் 'பண்டிதம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தேன். பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த



போது அறிவியல் சஞ்சிகையான சுடரின் ஆசிரியராக இருந்தேன். 'சுடர்' ஆரம்பத்தில் தட்டச்சுப் பிரதியாக வெளிவந்தது. பின்னர் அதை அச்சில் கொண்டு வந்தேன். இது நடந்தது 1965-66 காலத்தில்.

பயிற்றப்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியராகக் கற்பிக்கின்ற வேளை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திலும் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளை அந்த நிலையத்தின் ஆங்கில செய்தி ஏடான FWC News Letterஐ 1978 முதல் 1984 வரை அதன் ஆசிரியராக இருந்து வெளியிட்டேன்.

*கே:* வெளிக்கள நிலையம் போலவே ஆசிரிய வள நிலையத்திலும் பணியாற்றினீர்களல்லவா? அங்கு எவ்வாறான பணிகளை ஆற்றினீர்கள்?

*ப:* ஆம். நல்லூர் ஆசிரிய வள நிலையத்தின் பொறுப்பை வகித்தேன். விஞ்ஞான பாடத்தில் மாணவர்களது அடைவை உயர்த்துவதற்கு ஆசிரியர்களை வளப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது. அவ்வகையில் ஆசிரியர்களுக்கான பல்வேறு செயலமர்வுகளை ஒழுங்கு செய்து, துறைசார் நிபுணர்களை அழைத்து வாண்மை விருத்தியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தேன்.

*கே:* பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளில் உங்களது பங்களிப்பு விதந்து பேசப்படுகிறது. அவை பற்றிக் கூறுங்கள்.

*ப:* 1972 ஆம் ஆண்டு ஆ. சிவனேசச்செல்வனுடன் இணைந்து 'பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா மலரை' வெளியிட்டேன். 1973இல் அவருடன் இணைந்து 'மறுமலர்ச்சிக் காலம்-இலக்கியச் சிறப்பிதழ்' என்ற நூலை வெளியிட்டேன். தெல்லிப்பழை கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் இது வெளியிடப்பட்டது. 1971 முதல் 1976 வரையான காலப்பகுதியில் வெளிவந்த 'மகாஜனன்' இதழின் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினேன். எனது ஆசிரியர் வித்துவான் க.சொக்கலிங்கத்தின் மணிவிழா மலரை நானும் வரதர் அவர்களும் தொகுத்து வெளியிட்டோம்.

1977 இல் சொக்கலிங்கம் அவர்கள் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உருவாக்கிய போது அவருடன் இணைந்து செயற்பட்டேன். கழகம் வெளியிட்ட முதல் ஐந்து நூல்களையும் பதிப்பிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

அவ்வகையில் கலாநிதி க.சொக்கலிங்கம், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் நா.சுப்பிரமணியன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரது தமிழியல் ஆய்வு நூல்களைப் பதிப்பித்தேன்.

பிரான்சில் வதியும் சி.மனோகரனால் தொகுக்கப்பட்டு பிரான்ஸ் மகாஜனா பழைய மாணவர் சங்கத்தால் 2004 இல் வெளியிடப்பட்ட 'பவள மல்லி' நூலை அச்சாக்கும் பணியிலும் ஈடுபட்டேன்.

அதே போல பாவலர் துரையப்பாபிள்ளையின் 'சிந்தனைச்சோலை' கவிதை நூலையும் மீள்பதிப்புச் செய்தேன். 'சிந்தனைச் செல்வர் பொ.கைலாசபதி: ஆக்கமும் ஆளுமையும்' நூலையும் தொகுத்தேன். 'இடப்பெயர்வு ஆய்வு', 'கைலாயமாலை' நூல்களைப் பதிப்பித்தேன்.

வித்துவான் க.சொக்கலிங்கத்துடன் இணைந்து 'கட்டுரைக்கோவை' நூலையும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவுடன் இணைந்து 'தமிழியற் கட்டுரைகள்' நூலையும் எழுதியுள்ளேன். 'ஈழத்துத் தமிழறிஞர்' என்ற தலைப்பில் சி.வை.தாமோதரம்பிள்ளை, கணேசையர் ஆகியோர் பற்றிய கட்டுரை நூலையும் எழுதி வெளியிட்டுள்ளேன்.

அர்ச்சுனாவில் நான் மொழியாக்கம் செய்து வெளியிட்ட சிறுவர் கதைகள் 'சுதந்திரமாய்ப்

நேர்காணல்:
இயல்வாணன்

பாடுவேன்' என்ற தலைப்பில் 'வரதர் கதை மலராக' வெளியிடப்பட்டுள்ளது.

*கே:* பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பல்வேறு பெயர்களில் எழுதியுள்ளீர்கள். எவ்வாறான கட்டுரைகளை எழுதியுள்ளீர்கள்?

*ப:* இலக்கியம், வரலாறு, அறிவியல், கல்வியியல் சார்ந்த கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளேன். சுதந்திரன், ஈழநாடு, உதயன் எனப் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளேன். ஆடலிறை, செந்தூரன், பொய்கையார், காங்கேசன், கூத்தன், நடராஜ மைந்தன், திருப்பெருந்துறை இறை எனப் பல பெயர்களிலும் எழுதியுள்ளேன். விமர்சனக் கட்டுரைகளையும் வரைந்துள்ளேன். 1995 ஆம் ஆண்டு மகா இடப்பெயர்வின் பின் அழிந்து போன வீட்டுடன் எழுத்துப் பிரதிகளும் இல்லாமற் போய்விட்டன. அத்துடன் எல்லாவற்றையும் என்னால் ஞாபகப்படுத்தவும் முடியவில்லை.

*கே:* நமது தமிழ்ச் சூழலில் பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகள் எவ்வாறுள்ளன எனக் கருதுகிறீர்கள்?

### நூல் பதிப்புப் பணி இப்போது முன்னேறியுள்ளது

*ப:* தமிழில் பதிப்பு முயற்சியின் முன்னோடிகள் ஆறுமுகநாவலரும், சி.வை.தாமோதரம் பிள்ளையுமே. அவர்களே பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த ஆரம்ப கர்த்தாக்களாவர். இவர்களைப் பின்பற்றியே தமிழ் நாட்டில் உ.வே.சாமிநாதஐயர் முதலியோர் பதிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அப்போது அச்சுமுறையின் குறைபாட்டால் இம்முயற்சி குறைவாக இருந்தது.

இன்று கணனி அச்சாக்க முறை பெருவளர்ச்சி கண்டுள்ளதால் தொகுப்பு மற்றும் பதிப்பு முயற்சிகள் அதிகளவில் இடம்பெறுகின்றன. பதிப்பக வெளியீடுகள், நூலாசிரியர்களது வெளியீடுகள், இதழ் நிறுவன வெளியீடுகள், தொகுப்புக்கள் எனப் பலவாறாக வெளியிடப்படுகின்றன.

## மாணவரின் பல் திறன்களையும் வளர்க்கும் கல்வித் திட்டம் இன்றியமையாதது என்கிறார் மயிலங்கூடலூர் நடராசன்

இவ்வகையில் பெருந்தொகையான அன்பளிப்பு நூல்களை வெளியிட்ட மில்க்வைற் நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இவ்வாறு பலவுள்ளன.

ஆயினும் தொகுப்பு என்ற வகையில் இங் கும், புலம்பெயர் நாடுகளிலும் பல வெளி வந்துள்ளன. எனது ஞாபகத்தில் உள்ளபடி கவிதைச் செல்வம், ஈழத்துக் கவி மலர்கள், அமைதி குலைந்த நாள்கள், மரணத்துள் வாழ்வோம், தமிழ் எங்கள் ஆயுதம், பதினொரு ஈழத்துக் கவிஞர்கள், காலமெழுதிய வரிகள், வேற்றாகி நின்ற வெளி, சொல்லாத சேதிகள், வெளிச்சம் கவிதைகள், மீகான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் முதலிய கவிதை நூல்களைக் குறிப்பிடலாம்.

அதே போன்று சிற்பி தொகுத்த் ஈழத்துச் சிறுகதைகள், தகவம் பரிசுக்கதைகள், கதைப் பூங்கா, விண்ணும் மண்ணும், செ.யோகநாதன் தொகுத்த வெள்ளிப்பாதசரமும் ஒரு கூடை கொழுந்தும், செங்கை ஆழியான் தொகுத்த ஈழ கேசரி சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள், மறுமலர்ச்சிச் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள் என்பன, வாசல் ஒவ்வொன்றும், வெளிச்சம் சிறுகதைகள், இங்கிருந்து எனப் பல சிறுகதைத் தொகுப்புக்களையும் குறிப்பிடலாம்.

இந்தியாவிலும் புலம்பெயர் சூழலிலும் பலரது படைப்புக்களைத் தொகுக்கும் செயற் பாடுகள் நடைபெறுகின்றன என அறிகிறேன். அவை பற்றி முழுமையாக அறியமுடியவில்லை.

ஈழத்தில் வெளிவந்த நூல்கள் பற்றிய முன்னோடி முயற்சியாக 'வரதரின் பல குறிப்பு 1964-65' நூலில் உள்ள ஒன்பது பக்கப்பட்டியல் அமைந்தது. இப்போது லண்டனிலிருந்து என்.செல்வராஜா 'நூல் தேட்டம்' என்ற பெயரில் ஐயாயிரம் நூல்கள் பற்றிய தகவல்களை ஐந்து தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இப்பதிவு மிகமுக்கியமான பணி. இதன் மூலம் நூல்கள் மக்களிடையே பரவலடைய வழியேற்பட்டுள்ளது.

தொகுப்பு மற்றும் பதிப்பு முயற்சிகள் இப்போது அதிகரித்துள்ளன. இவை மேலும் வளர்க்கப்பட வேண்டும். அச்சுப் பிழைகள் அதிகமாக இருப்பதுதான் பிரதானமான குறைபாடு. கணனி அச்சாளர்கள் தமது அறிவையும் ஆற்றலையும் வளர்க்கும் போது இக்குறைபாடு நீங்கிவிடும்.

*கே:* நீங்கள் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். கல்வி எவ்வாறு அமைய வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?

*ப:* பாடசாலைக் கல்வி மரபு இன்று வரை பரீட்சைகளையே சிறப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் எல்லோருமே அந்த நோக்கத்தை எய்தும் வகையிலேயே செயற்படுகிறார்கள். கல்வி பல்வேறு விதமான அறிவையும் அனுபவத்தையும் ஏற்படுத்த வேண்டும். மாணவரது பல்திறன்களையும் வளர்க்க வேண்டும். தத்தமது மொழி, இலக்கியம், வரலாறு என்பன பற்றிய அறிவும் பிரக்ஞையும் அவர்களிடம் இருக்க வேண்டும். எமது கல்வித்திட்டத்தின் இதற்கான முக்கியத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

*கே:* 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பு எண்பதுகளில் வந்த முக்கியமான கவிதை நூலாகும். அத்தொகுப்புப் பற்றி இப்போது சில எதிர்வினைகள் மேற்கிளம்பியுள்ளன. மரணத்துள் வாழ்வோம் தொகுப்புக் குறித்தும், அதில் சிலர் புறக்கணிக்கப் பட்டதாகக் கூறுவது குறித்தும் உங்களது கருத்தென்ன?

*ப:* 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பு அப்போதைய எமது வாழ்நிலை சார்ந்து வெளிப்பட்ட கவிதைகளின் தொகுப்பாகும். 'எமக்கு மரணம் ஏற்படலாம். அதற்குள்ளும் நிலைபெற்று வாழ்வோம்' என்ற கருத்தை மையப்படுத்தி வெளிவந்த அரசியல் கவிதைகள் அதிலுள்ளன.

இ.பத்மநாப ஐயர், அ.யேசுராசா, உ.சேரன் ஆகியோருடன் நானும் அத்தொகுப்பில் பணியாற்றினேன். இ.முருகையன் முதல் விமல் வரை 19 கவிஞர்களின் 82 கவிதைகள் அதில் இடம்பெற்றன. மேற்குறித்த கருதது நிலை சார்ந்து எழுதிய கவிதைகள் அதில் இடம்பெற்றன. யாரையும் விலக்குவது தொகுப்பாளர்களின் நோக்கமாக இருக்கவில்லை என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். மற்றப்படி புறக்கணித்ததாக ஸ்ரீபிரசாந்தன் போன்றோர் கூறியதை நானும் அறிவேன். அக்கருத்துடன் எமக்கு உடன்பாடில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Air Transport Training College

Professional Development Centre of the Singapore Institute of Aerospace Engineers

*We don't train people to hunt for a JOB – We train people where JOBs hunts for you!*

## Specialist Diploma in Aircraft Maintenance & Engineering

KLM uk engineering

- Specialist Diploma offered by Singapore Institute of Aerospace Engineers
- Aims to integrate basic aviation skills required for the aerospace industry
- Delivered in partnership with KLM UK Engineering Limited
- 1-Year Full-time: January 2009 (2 semesters)
- Admission Requirement: GCE 'O' Level' with credits in English, Math & General Science

Fees: - 1. Registration fee S$ 492.20 (payable on approval by ATTC – Singapore)
2. Course Fee S$ 19,795 (payable on approval of Student Pass by Singapore Immigration)

## Foundation Degree in Aircraft Engineering

KINGSTON UNIVERSITY

- Professional Degree offered jointly by Kingston University of London and Air Transport Training College
- Industry-based, vocational qualification designed for people who want to get a practical start to their career in the aerospace industry
- Designed to cover the knowledge requirements for the SAR Pt 66 CAT 'B1' license
- 2-Year Full-time: February 2009
- Admission Requirement: GCE 'A' Level' with credits in English, Math & Physics

Fees 1. Registration fee S$ 492.20 (payable on approval by ATTC – Singapore)
2. Course Fee **S$ 25,145 PER YEAR** (payable on approval of Student Pass by Singapore Immigration)

For further details, brochure and application form please contact
NN *edu* CONSULT, Maruti Court #06 – 03, No. 25, Arethusa Lane, Colombo – 6
Phone: 077 32 42 872 Email : nnconsult@sltnet.lk



## குறுகிய நேர சேவை சுல் ெ மிேனாசன்

அழைப்பிதழ்கள் அச்சிடல், பிரசுரங்கள், கண்ணீர் அஞ்சலி என்பன குறுகிய நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படும். வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை.

பிள்ளையார் அச்சகம்
சிவன்கோயிலடி, 356,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.


## ஒத்துமாறல்

யாழ்ப்பாண சுகாதார திணைக்களத்திலிருந்து வவுனியா சுகாதார திணைக்களத்திற்கு ஒத்துமாற விரும்பும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பொது அபிவிருத்தி) தொடர்பு கொள்ளவும்.

024 222 2278 – அலுவலகம்
0771235653 – (மாலை 6 மணிக்குப்பின்)


## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுய தெரிவு முறை பற்றிய வரன் முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவுநர், சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடி. தொலைபேசி - 2360488, 2360694, 4873929.


## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் வீதியில் ஏறத்தாழ ½ km தூரத்தில் பஸ் தரிப்பிடத்திற்கு முன் உள்ள ஒழுங்கையில் உள்ள காணி விற்பனைக்குண்டு. 4 பரப்பு காணி - நான்கு எல்லைகளுக்கும் அத்திவாரம் வெட்டி பத்திரிப்பு போடப்பட்டுள்ளது. தொடர்பு - 077 3083784 (கொழும்பு)
(சி/554236)

## மணமகள் தேவை

உயர் கௌரவ குடும்பம், 1979, பூரட்டாதி, மீனம் - செவ்வாய் 10 இல்,MBBS வைத்தியருக்கு, பட்டத்துடன் அரச பதவியிலுள்ள மணமகள் தேவை. (ஆசிரியர், வைத்தியர், பொறியியலாளர், வங்கி - முகாமைத்துவம் - பொது நிர்வாகம் இவற்றுக்கு இணையான சேவையினர், பல்கலை மாணவியும்) அருள் முருகன் திருமணப் பணியகம், இல.03, யாழ் வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணம். தொ.பே. இல. 222 9334


## மானிப்பாயில் ......
## A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினி வகுப்புக்களும் ஆரம்பம்!!

- Advanced Diploma in ICT - ADICT
- Diploma in Computer Hardware Eng.
- Computerized Accounting Packages
- Diploma in Ms Office
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Desktop Publishing
- Diploma in AutoCAD

மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணம்.

சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மிகவும் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள்.

** தற்பொழுது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன !! !! **

மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


## மரண அறிவித்தல்

### திருமதி நாகமுத்து இலட்சுமி



மானிப்பாய், உச்சியோடையைப் பிறப்பிடமாகவும், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இலட்சுமி (22.08.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சுப்பர் நாகமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிவப்பிரகாசம், சிவபாதம், சிவயோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், சரஸ்வதி, லிங்கேஸ்வரி, யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், கோகிலன், சகிலன், தர்மினி, பிரியங்கா, தாரங்கா, பிரவிந், தனுசன், லிபேஷன் (ஜேர்மனி), விதுசன் (ஜேர்மனி), நரேஷ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
நா.சிவப்பிரகாசம்
நா.சிவபாதம் *(மகன்மார்)*.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

[77402]


## வேலையாள் தேவை

யாழில் பிரபல புடைவைக் கடைக்கு
**பெண் விற்பனையாளர் தேவை.**
கிட்டிய தூரத்தில் வசிப்பவர்களுக்கும்
அனுபவத்துக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
*விள.இல. : 3130, மே/பா.உதயன்*
[சி/554286]


## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு அங்கத்தவர் கொண்ட ஆசிரியர் குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை. யாழ் நகர் அண்டிய பகுதிகளில் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: 0774107896 *அம்மன் வீதி, நல்லூர்.*

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு அருகில் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: திரு.A.பற்றிக்
T.P.: 0212225380

## வேலை வாய்ப்பு

பருத்தித்துறை பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப்பணி ஸ்தலத்திற்கு கீழ் காணப்படும் பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர். பொருத்தமானவர்கள் 27.08.2008 தொடக்கம் 29.08.2008 வரையான காலப் பகுதியில் நேரில் சமூகம் அளிக்கவும்.

01. Shuttering Carpenters
 - சட்டறிங் வேலை அனுபவமிக்க தச்சுத் தொழிலாளர்கள்.
02. Bar Benders
 - கம்பி வேலை அனுபவமிக்க தொழிலாளர்கள்
03. Masons - அனுபவமிக்க மேசன் தொழிலாளர்கள்
04. Mason Helpers
 - அனுபவமிக்க மேசன் உதவியாளர்கள்
05. Electricians
 - அனுபவமிக்க மின் இணைப்பாளர்கள்
06. Plumbers
 - அனுபவமிக்க நீர்க் குழாய் பொருத்துனர்கள்

தொடர்புகளுக்கு: முகாமையாளர்,
பொதுச்சந்தைக்கான புதிய கட்டட நிர்மாணப்பகுதி,
*பேருந்து நிலையம், பருத்தித்துறை.*

## சுவையூட்டப்பட்ட பால் விநியோகம்

வடமராட்சி,ஓக.24

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் மந்திகை பால் விற்பனை நிலையத்திலிருந்து சுவையூட்டப்பட்ட பாலை வடமராட்சிப் பகுதியில் உள்ள பல பாடசாலைகள் பெற்றுவருகின்றன.

சில பாடசாலைகள் தயிர், யோக்கட் ஆகியவற்றைக் கொள்வனவு செய்து வருவதாகவும் பருத்தித்துறை அரசினர் [illegible] சி.வசீகரன் தெரிவித்துள்ளார். (203-236)

## ஆற்றொணாத் துயருடன் ஆண்டு இரண்டில் ..

அமரர்
### சின்னப்பு இராமலிங்கம் (நேசலிஸ்)

தோற்றம் 15.09.1936 மறைவு 14.09.2006



திதி: ஆவணித்திங்கள் அபரபட்ச அட்டமி

அன்போடும் பண்போடும் பழகி என்றும்
அகிலமதில் நாமுயர வழிகள் செய்தீர்
இன்பமுடன் எமதுயர்வில் குளிர்வு கண்டு
எமக்கெனவே இயன்றவரை சேவை செய்தீர்
புன்னெறியை போக்கியிங்கே புனிதர் ஆக
பொன்னான அறிவுரைகள் கூறி நின்றீர்
என்னையா ஈராண்டு பறந்ததுவோ - உருகி
இறைதாளை வேண்டுகின்றோம்
சாந்தி கொள்ள

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இல.298, கோயில் வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. - 021 222 6745*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜமெய்க்காப் பொலிஸாருக்கும் எனது தாயாருக்கும் நன்றி
# 100 மீற்றரில் தங்கம் வென்ற ஷெல்லி பிரேசர் உருக்கம்



ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றதற்காக எனது தாய் மற்றும் பொலிஸுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்கிறார் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்ற ஜமெய்க்காவின் ஷெல்லி அன்பிரேசர்.

ஒலிம்பிக்போட்டிகள் பீஜிங்கில் நடைபெற்று வருகின்றன. பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஜமெய்க்கா வீராங்கனைகள் தங்கம், வெள்ளி, வெண்கலம் உட்பட மூன்று பதக்கங்களையும் வென்றனர். இதில் உலகின் அதிவேக வீராங்கனையாக சிறப்புப் பெற்றார் ஷெல்லி அன் பிரேசர். ஜமெய்க்காவின் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த ஷெல்லி பிரேசரின் தந்தை மெக்சின் பிரேசருக்கு தொழில், ஒவ்வொரு தெருக்களாக சென்று வீட்டு உபயோகப் பொருள்களை விற்பனை செய்வது தான்.

ஷெல்லி பிரேசரும் சிறுவயதில் இதே தொழிலைத்தான் செய்துவந்துள்ளார். தெருக்களில் பொருள்களை விற்பனை செய்யக்கூடாது என ஜமய்க்காப் பொலிஸார் தடை விதித்துள்ளனர். ஆனால் வறுமை காரணமாக ஷெல்லி பிரேசர், அவர்கள் கைகளுக்கு சிக்காமல் அதிவிரைவாக ஓடுவாராம். அதுவே எனக்கு பயிற்சியாக அமைந்துவிட்டது என உருக்கமாக கூறுகிறார் ஷெல்லி பிரேசர்.

ஒலிம்பிக் வெற்றி குறித்து ஷெல்லி பிரேசர் கூறுகையில்,

''பீஜிங் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் எனது வறுமைக்கு விடை கிடைக்கும் என நம்புகிறேன். ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றதற்கு எனது தாய் மற்றும் பொலிஸாருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.

ஷெல்லி பிரேசர் குடும்பம் இன்றும் வாடகை வீட்டில்தான் வசித்து வருகிறது. ஆனால் பிரேசர் தற்போது உதவித் தொகையின் மூலம் அங்குள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் 2 ஆம் ஆண்டு படித்து வருகிறார். விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அப்பல்கலைக்கழகத்தில், தீவிர பயிற்சி பெற்ற பிரேசர் தற்போது ஒலிம்பிக்கில் தங்கம் வென்று அதிர்ச்சியளித்துள்ளார். (50)

## ஊக்க மருந்து வழங்கப்பட்ட 4 குதிரைகள் ஒலிம்பிக் போட்டியிலிருந்து நீக்கம்



ஒலிம்பிக் குதிரையேற்ற போட்டிகளில் பங்கு பற்றிய நான்கு குதிரைகள் ஊக்க மருந்து சோதனையில் தோல்வியடைந்துள்ளன. இந்த குதிரைளுக்கு தடை செய்யப்பட்ட ''கப்சசின்'' ஊக்கமருந்து வழங் கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை ஹொங்கொங்கில் நடைபெற்ற தனிநபர் பிரிவுக்கான ஷோஜம்ப் குதிரையேற்ற இறுதிப் போட்டியில் இருந்து இந்த நான்கு குதிரைகளும் நீக்கப்பட்டன. இதன்படி அயர்லாந்து, ஜேர்மனி, பிரேசில் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இந்த போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டன.

இதில் நோர்வேயின் கமிரோ என்ற குதிரை ஏற்கனவே ஷோஜம்ப் போட்டியின் அணி பிரிவில் பங்கு பற்றி வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது. எனவே, இந்த பதக்கத்தை பறிமுதல் செய்வது குறித்து சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் ஆலோசனை நடத்தி வருகிறது. இந்த பிரிவில் அமெரிக்கஅணி தங்கப்பதக்கம் வென்றதோடு கனடா வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது. அத்துடன் போட்டியில் நான்காவது இடத்தை பிடித்த சுவிட்சர்லாந்துக்கு தற்போது வெண்கலப்பதக்கம் வெல்லும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (50)

Beijing 2008

## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நிலை | நாடு | தங். | வெள். | வெண். | மொ. |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 47 | 17 | 25 | 89 |
| 2 | அமெரிக்கா | 31 | 36 | 35 | 102 |
| 3 | பிரிட்டன் | 18 | 13 | 13 | 44 |
| 4 | ரஷ்யா | 17 | 18 | 22 | 57 |
| 5 | ஜேர்மனி | 14 | 09 | 13 | 36 |
| 6 | ஆஸ்திரேலியா | 12 | 14 | 16 | 42 |
| 7 | வடகொரியா | 11 | 10 | 07 | 28 |
| 8 | ஜப்பான் | 09 | 06 | 10 | 25 |
| 9 | இத்தாலி | 07 | 08 | 10 | 25 |
| 10 | நெதர்லாந்து | 07 | 05 | 04 | 16 |
| 11 | ஜமெய்க்கா | 06 | 03 | 01 | 10 |
| 12 | பிரான்ஸ் | 05 | 13 | 16 | 34 |
| 13 | உக்ரைன் | 05 | 04 | 12 | 21 |
| 14 | ஸ்பெயின் | 04 | 06 | 02 | 12 |
| 15 | பெலாரஸ் | 04 | 04 | 08 | 16 |
| 16 | ருமேனியா | 04 | 01 | 03 | 08 |
| 17 | கனடா | 03 | 08 | 06 | 17 |
| 18 | போலந்து | 03 | 04 | 01 | 08 |
| 19 | செக் | 03 | 03 | 00 | 06 |
| 20 | சுலோவாக்கியா | 03 | 02 | 01 | 06 |
| 21 | நியூசிலாந்து | 03 | 01 | 05 | 09 |
| 22 | எதியோப்பியா | 03 | 01 | 01 | 05 |
| 23 | ஜோர்ஜியா | 03 | 00 | 03 | 06 |
| 24 | கியூபா | 02 | 06 | 11 | 19 |
| 25 | கென்யா | 02 | 04 | 02 | 08 |
| 26 | பிரேசில் | 02 | 03 | 07 | 12 |
| 27 | டென்மார்க் | 02 | 02 | 03 | 07 |
| 28 | தென்கொரியா | 02 | 01 | 03 | 06 |
| 29 | சுவர்சர்லாந்து | 02 | 00 | 03 | 05 |

## ஜிம்னாஸ்ரிக் சர்ச்சை தொடர்கிறது



ஒலிம்பிக் பதக்கம் வென்ற சீன ஜிம்னாஸ்ரிக் வீராங்கனைகளின் வயது குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐ.ஓ.சி.) சர்வதேச ஜிம்னாஸ்ரிக் சம்மேளனத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் சீனாவுக்காக பதக்கம் வென்ற பல வீராங்கனைகள் 13, 14 வயது கொண்டவர்கள் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டதை அடுத்தே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக ஐ.ஓ.சி. சார்பாக பேசிய பெண் ஒருவர் குறிப்பிட்டார். ஒலிம்பிக்கில் ஜிம்னாஸ்ரிக் போட்டிக ளில் பங்குபெற 16 வயது பூர்த்தியாகி இருக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தமது வீராங்கனைகளின் வயது குறித்த அனைத்து ஆவணங்களையும் சர்வதேச ஜிம்னாஸ்ரிக் சம்மேளனத்திடம் சமர்ப்பித்துள்ளதாக சீன ஜிம்னாஸ்ரிக் பயிற்சியாளர் லியூஷங்சான் குறிப்பிட்டுள்ளார். இம்முறை ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் சீனா அமெரிக்காவை பின்தள்ளி பெண்கள் பிரிவில் மொத்தமாக 6 தங்கப்பதக்கங்களை வென்றது. (50)

## புதிய சம்பியனுடன் பழைய சம்பியன்



அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், நீச்சல் மன்னன் மைக்கல் பெல்ப்ஸின் படத்துடன் உள்ள 'ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேடட்' புத்தகத்தைக் காண்பிக்கிறார் முன்னாள் சம்பியன் மார்க் ஸ்பிட்ஸ். 1972 இல் முனிக்கில் நடைபெற்ற ஒலிம் பிக்கில் நீச்சல் போட்டியில் 7 தங்கம் வென்று சாதனை படைத்தார். ஸ்பிட்ஸ் 8 தங்கம் வென்று அந்த சாதனையை பீஜிங்கிப் ஒலிம்பிக்கில் முறியடித்துள்ளார் பெல்ப்ஸ்.

## நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருவடி- நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையிர்
வெற்றிதரு மென்றும் விழைவு.
- யோகர் சுவாமிகள்.

### ஒன்றையே வேண்டுவோம்

நல்லூரானை நாடி பக்தியுடன் வந்துவிட்டால்
அல்லல் களைந்திடுவான் அருளாசி நல்கிடுவான்
பக்திப் பரவசமாய்ப் பாடல் இசைத்துவிட்டால்
சித்தம் மகிழ்ந்திட்டே சித்திகள் அளித்திடுவான்

சுமுகமான வாழ்வுக்கு சுயநலத்தைக் கைவிட்டு
ஒரு முகமாக நாம் ஒன்றையே வேண்டிநின்றால்
கூட்டுப் பிரார்த்தனையில் நாட்டம் மிகக் கொண்டு
நாட்டு நலனுக்காக நல்லாசி வழங்கிடுவான்.

சி.சாந்தா, மானிப்பாய்.

### வேறுகதியில்லை உனைத் தவிர

ஆறுமுகவேலா ராஜ அலங்காரா
வீறுகொண்ட இப்போரை தீர்க்கவாராயோ
ஊர் ஊராய் திரிந்தே எம் காலம் கழிகின்றதே
ஆற்றுப்படை கொண்ட எங்கள் வடிவேலா
ஏறுமயில் ஏறி நல்லூரானே நீ ஓடிவாராயோ
வேறு கதியில்லை எமக்கு உனைத் தவிர.

இந்திரன் கபிலன், யாழ்ப்பாணம்.

### அன்பரைக்காக்க தயக்கமேன்

அடியவர் பல கோடி
அன்புடன் உனை நாடி
அழகுடன் உன் புகழ் பாடி
அடக்கமாய் துயர்களைய வேண்டி
அகம் உடைந்து போக பழனியாண்டி நீ
அக்கறை காட்டா மர்மம் தானென்ன?
அன்பரைக் காக்க தயக்கமா உனக்கு
அழகா இது சரியா? இல்லை முறையா?

சோ.ரஜீவ், திருநெல்வேலி.

### கருணை காட்டுவான் கந்தன்

கந்தனுக்கு திருநாளாம், கார்த்திகை திருநாள்
கலங்கும் அடியவர்க்கு அருள் பாலிக்கும் திருநாளாம்
கற்பூரச்சட்டி எடுத்து கந்தா என்று அழைத்தால்
கற்பூரச் சோதியில் நின்று கருணை காட்டுவான் - கந்தன்

நித்தி, நல்லையம்பதி.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய ஆதரவுடன் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருமதி சுகன்யா அரவிந்தனின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. மிருதங்கம் கே.கஜன், முகர்சிங் கே.நந்தகுமார்.

* * *

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகாசபையின் ஏற்பாட்டில் நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். இதில் இன்று 'தாகரன் வதம்' எனும் தலைப் பில் சொற்பொழிவு இடம்பெறும்.

* * *

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் பெருந்திருவிழா காலங்களில் நாவலர் மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'புத்தியும் சித்தியும்' என்னும் தலைப்பில் ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசு சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

மாணிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, யாழ்.சைவபரிபாலன சபை [illegible] மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தியாகராஜா



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, சிலாபத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தியாகராஜா 21.08.2008 அன்று சிலாபத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் சின்னம்மாவின் பாசமிகு கணவரும் நி.செல்வராணி (வவுனியா), தி.இராஜபாலன் (முன்னாள் கிராம உத்தியோகத்தர்,யாழ். நீராவியடி ஜே/101), தி.சத்தியபாலன்(அதிபர்,யாழ்.புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயம்), தி.சிவபாலன்(ஜேர்மனி) ஆகியோரின்அன்புத் தந்தையும் நித்தியானந்தன்(கச்சேரி, வவுனியா), கமலராணி, வசந்தி (ஆசிரியை, யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), வனஜா ஆகியோரின் அன்பு மாமனும், மதுரா, மதுரன், மதுராதீபன், வைகுந்தன், அகலிகை, தாட்சாயினி, பிரகஸ்பதி, சிந்துஜா, துவாரகன், பிரத்யுன்மன்,மகிஷாயினி, லௌறின், லக்ஷா, லஜின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிலாபம், மாதம்பையில் இன்று(24.08.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.சத்தியபாலன்
32/1, பிறவுண் வீதி,நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 5869

80/7, டிப்போ வீதி,
சிலாபம்,
தொ.பே.: 032 4923757 [77403]

## பொன்னையா திருநாவுக்கரசு (புலவர்)
### (பிரபல கட்டடக் கலைஞர்)



அல்வாயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா திருநாவுக்கரசு நேற்று (23.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற நல்லதம்பி - லச்சுமி தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குகதாசன் மற்றும் குமாரசாமி (திரவியம்), கந்தசாமி (நவம்), உமாபாலன், காலஞ்சென்ற உதயபாலன் மற்றும் சிவபாலன் (குட்டி), நகுலேஸ்வரி (வள்ளி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நாகேஸ்வரன், விஜயவேணி, கோமதி, இந்திராணி, அம்பிகா, திரேசா, நாகேஸ்வரி(ஓய்வுபெற்ற ஆசிரியை), யோகம்மா, கனகம்மா, பொன்மலர், ரேவதி (பெற்றி), அருமைராசா, நற்குணம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), இராசகிளி, காலஞ்சென்ற கனகலிங்கம் (வவி) மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் திருநாவுக்கரசு, சாரங்கம், துரைராஜா, சுந்தரமூர்த்தி, செல்லத்துரை, சரஸ்வதி, ஞானேஸ்வரி, சின்னராசா ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பத்மாவதி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை இல.3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.ஆதவன் (பேறாமகன் - தபாலதிபர் - ஊர்காவற்றுறை)
பெ.சுரேஸ் (மருமகன்),
திருமதி நா.நகுலேஸ்வரி (இத்தாலி).

3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
அரியாலை. [77422]


# Sales Executive

We are looking to a young, dynamic and a self motivated individual with a passion to achieve sales objectives and targets in the region of Jaffna. Ideal candidate we are looking for should be below 35 years of age with 4-5 years of experience in selling FMCG products in a reputed company. Also should possess very good G.C.E (A/L) results with credits in Mathematics and English at G.C.E(O/L).

In addition to an excellent working environment the selected candidates will receive an attractive remuneration package with other benefits. Please apply with your complete CV and contact details of two non-related referees with position applied for marked on the left hand corner of the envelop or the subject line of the e-mail, within 10 day's of this advertisement to;

HEMAS
Enriching Lives

Senior Manager - Human Resources,
**HEMAS MANUFACTURING (PVT) LTD**
36, Bristol Street, Colombo 01.
E-mail: careers.consumer@hemas.com
www.hemas.com
(Online applications preferred on;
www.topjobs.lk/hemas)

Hemas Holdings PLC is a leading public quoted conglomerate in Sri Lanka with interest in FMCG, Pharmaceuticals, Leisure, Freight, Travel, and Power Generation & Hospitals

Hemas Manufacturing (Pvt) Ltd as a part of the Hemas Group, manufactures & markets a wide range of FMCG Brands such as Baby Cheramy, Clogard, Kumarika, Dandex, Pro Sport, Diva & many others. Our manufacturing facilities are ISO Certified & we have a strong R&D set up closely networked with Suppliers & R&D labs abroad.


## உயிரியல் ஆசிரியர்களுக்கு இன்று களவேலை

யாழ்ப்பாணம்,ஓக.24

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான நன்னீர்க்குளம் தொடர்பான களவேலை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சகலஆசிரியர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் யாழ்.விஞ்ஞான சங்கமும் கேட்டுள்ளன.

(202)


## விற்பனைக்கு

டபிறிசர், சோக்கேஸ், மேசை மற்றும் தேநீர் கடைக்குரிய உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
தொ.பே.: 021 4591094


## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை நந்தபாலா என்பவரது தேசிய அடையாள அட்டை 23.8.2008 சனிக்கிழமை யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பயணிகள் சிற்றூர்தியினுள் தவறவிடப்பட்டுள்ளது.(அத்துடன் இராணுவ அடையாள அட்டை, சாரதிய அனுமதிப் பத்திரம்) கண்டெடுத்தவர்கள் 33/4, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தந்துதவவும்.


## பபு ரெக்ஸ்ரைல்ஸ்

நவீன ரக பஞ்சாபி, சாறி, சிறுவர்களுக்கான பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ் சகல விதமான ரெடிமேட் ஆடைகள் என்பன விற்பனைக்குண்டு.

No : 30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## வான்கோழி விற்பனைக்கு

வெள்ளை நிறத்தில் கறுத்தப்புள்ளி விழுந்த முட்டையிடும் பருவமுடைய வான்கோழி ஜோடியாக விற்பனைக்குண்டு. பிற்பகல் 4 மணியின் பின் நேரடியாக வரவும்.

தங்கராஜா,
29/9, மருதடி றோட், யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

இரும்புப் பெட்டகம் (England), கிறைண்டர் 12", 5" (England) பிளேற் வெட்டும் இயந்திரம், மோட்டர் 2Hp, டைனமோ 8kw, 9kw என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 222 6923
மாலை 4 மணிக்குப்பின் - 222 9941

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப, மீசாலை கிழக்கைச் சேர்ந்த 1977, பூரட்டாதி-02, கிரகபாவம்-07 கொண்ட லண்டனில் வர்த்தக நிறுவனம் நடத்தும், "P.R" உடைய மணமகனுக்கு, A/L கல்வித்தகைமை உடைய, நற்பண்பு, நற்குணம் கொண்ட ரோகிணி, திருவாதிரை, சுவாதி, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பெற்றோர் குடும்ப விவரத்துடன் சாதகத்தை அனுப்பி வைக்கவும். மணமகன் இலங்கை வந்துள்ளார்.

தொடர்பு: 0775590173, 0773604014
திருமதி கா.சத்தியா
மீசாலை கிழக்கு, மீசாலை.


# மரண அறிவித்தல்

## செல்வி தேனுகா சாந்தகுமார்



தென்மட்டுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தேனுகா, சாந்தகுமார் 22.08.2008 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சாந்தகுமார்- நந்தினி தம்பதியினரின் அன்பு மகளும், மயூரன், றேனுகா, ஜேனுகா, திலக்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24. 08. 2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 9 மணியளவில் நல்லடக்கத்திற்காக மட்டுவில் தூவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

வாதையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [77430]


# பதவி வெற்றிடம்

## Computer Instructor

IBMS நிறுவனத்தின் சாவகச்சேரி கிளைக்கு கணனி போதனாசிரியருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகவல் தொழில் நுட்பத்தில் Higher National Diploma அல்லது சமமான தகைமையுள்ள ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொழில் அனுபவம் மேலதிக தகமையாக கொள்ளப்படும்.

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தகைமையுடையோர் தமது சுயவிபரக்கோவையுடன் 26ம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு சமூகம் தரவும்.

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (IBMS)
#209, மானிப்பாய் வீதி, வைத்தீஸ்வராச்சந்தி,
யாழ்ப்பாணம்.


## The Annual General Meeting of Jaffna College Alumni Association.

The above meetting will be held on the **06th September 2008 at 3.30 p.m. in Ottley Hall**. Your presence is very much appreciated.

Annual General Meetting Agenda

* Prayer
* Minutes of the Last Ex.Co. metting
* Secretary's Report
* Treasurer's Report
* Principal's Report
* Election of new office bearers
* Any Other Business

Hony. Secretary

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 . 07 . 1933



உதிர்வு 26 . 07 . 2008

## திருமதி தம்பு தங்கம்மா

நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. [77416]

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்

அன்னை மடியில் 22 . 10 . 1943



இறைவன் அடியில் 25 . 07 . 2008

## சைவப்புலவர் தையல்நாயகி சண்முகராஜா

"விழுதுகளைத் தவிக்கவிட்டுச் சென்ற ஆலமரம் நீங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி வாழ்கின்றோம் நாங்கள்
எழுதிவிட்ட விதிப்படி அமைந்திடும் வாழ்க்கை
என்னதான் சொல்லியும் நிலைக்குமா யாக்கை"

எமது குடும்பத் தலைவி சிவபதமடைந்த செய்தியைக் கேள்வியுற்று உடனே சமூகம் தந்த உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் ஆறுதல் கூறி எம்மை ஆற்றுப்படுத்திய சமூகப் பெரியோர்களுக்கும் தொலைபேசி, தந்தி மற்றும் மின்னஞ்சல் மூலமாக தமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தித் தந்த அயலவருக்கும் இறுதிக்கிரியைகளின் போது எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைவருக்கும் எம்நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம்.

இன்று (24.08.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள எமது அன்னையின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்மார் - ச.சித்திவிநாயகன்,
ச.சிறிகாந்தன்,
மகள் - வி.நாகலட்சுமி.

207, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் [77419]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அவலத்தை வெளிப்படுத்தும் பொறுப்பு சமய நிறுவனங்களுக்கும் உண்டு

வன்னிப் பெருநிலம் மீண்டும் ஒரு மனிதப் பேரவலத்தைச் சந்தித்து நிற்கின்றது.

போர்ச் சன்னதம் கொண்டு நிற்கும் தென்னிலங்கை, தமிழர் தாயகம் மீது கொடூர யுத்தம் ஒன்றைத் திணித்திருப்பதால் மக்கள் வீடு, வாசல்களை இழந்து உணவின்றி, உடையின்றி அடிப்படை சுகாதார வசதிகளின்றி, அமைதி வாழ்வைத் தொலைத்து, ஏதிலிகளாக அலையும் அவல நிலைமை உருவாகியிருக்கின்றது.

ஈழத் தமிழ் மண்ணுக்கு நேர்ந்திருக்கும் இந்தக் கொடூரம்-கொடுமை-குறித்து சர்வதேசத்துக்கு எடுத்தியம்பும் பொறுப்பு அந்த மக்களோடு சேர்ந்து சமூக, சமயப் பணியாற்றும் மத பீடங்களுக்கும் அதிகம் உண்டு.

ஈழத் தமிழர் மத்தியில் சமூகப் பணியாற்றும் பல மத அமைப்புகள் இதில் கரிசனை கொண்டு செயற்பட்டு வருகின்றன.

இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் தலைவர் அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஈழத் தமிழ் மக்களின் அவல நிலையைச் சுட்டிக்காட்டி, உலகை நாக்கைப் பிடுங்குமாற்போல ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்.

*''ஜோர்ஜியாவை ரஷ்யா தாக்கும் போது ஐக்கிய நாடுகள் சபை முதலிய மேற்குலக நாடுகளும் அமைப்புகளும் விழுந்தடித்துக் கண்டிக்கின்றன. ஆனால் இலங்கையில் பல்குழல் பாயும்போதும், போர் விமானங்கள் குண்டுகள் வீசும் போதும், சிறுவர்கள் கொல்லப்படும் போதும், வழக்கமாக சிறுவர்களின் உரிமைகள் பற்றிப் பேசும் அமைப்புகளும் உலக நாடுகளும் மௌனம் காக்கின்றன. இது ஏன் என்பதுதான் தெரியவில்லை.''* -என்று சர்வதேச சமூகத்தைப் பார்த்துக் கேள்வி எழுப்பியிருக்கிறார் அவர்.

அதேசமயம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் ஒரு தைரியத்தையும் அவர் கொடுத்திருக்கின்றார்.

*''அழிவுகள் எப்போதும் தொடர் அழிவுகளாக இருக்கப் போவதில்லை. அழிவின் பின் நிச்சயமாக ஒரு புது வரலாறு பிறக்கும். இது, வரலாறு நமக்குக் கற்றுத் தந்த பாடம். எமது தமிழினம் இன்று அழிவுகளில் வாழலாம். ஆனால் எமது இனத்துக்கு ஒரு புதுயுகம் நிச்சயம் பிறக்கும்.''* - இப்படி நம்பிக்கை ஊட்டுகின்றார் அவர்.

இதேசமயம்,வன்னியில் ஈழத் தமிழ் மக்கள் படும் அவலம் குறித்து கவனம் எடுங்கள்; சிரத்தை கொள்ளுங்கள் என்று உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கின்றார் யாழ்.மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

*''கிளிநொச்சி மாவட்டத்தில் இருப்பிடங்களை விட்டு வெளியேறியோர் தற்போது மரங்களின் கீழும், திறந்த வெளிகளிலும், மிக மோசமான நிலையில் தங்கியுள்ளனர். அவர்களுக்குப் புகலிடமில்லை; குடிதண்ணீர் இல்லை; மலசலகூடங்கள் இல்லை; உணவு இல்லை; மருத்துவ வசதிகள் இல்லை; கூடாரங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அங்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதியும் இல்லை. அரசு உதவிகளை வழங்க முன்வந்தாலும் இராணுவக் கட்டுப்பாடுகளால் உதவிகள் சென்றடைய முடியாத நிலைமை காணப்படுகின்றது. இராணுவச் சோதனைச் சாவடிகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கே அனுமதி வழங்கப்படுகிறது. மருத்துவப் பொருள்கள் சோதனைச் சாவடிகள் ஊடாகக் கொண்டு செல்ல அனுமதிக்கப் படுவதில்லை.''* - என்று உண்மையை உலகுக்கு அம்பலப்படுத்தியிருக்கின்றார் யாழ்.ஆயர்அதிவண தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை.

தமிழர்தாயகம் மீது தான் தொடுத்திருக்கும் இந்தக் கொடூர இராணுவ நடவடிக்கையை யுத்தமே அல்ல என்கிறது கொழும்பு. இது மனிதாபிமான நடவடிக்கை என்கிறார் இலங்கைத் தீவின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மனிதாபிமானத்தின் பெயரால் பெரும் மனிதக் கொடூரத்தை-மனிதப் பேரவலத்தை-ஏற்படுத்தும் ஒரு யுத்தம் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. அந்த உண்மையை - மனிதாபிமானத்தின் பெயரால் மனிதப் பேரழிவு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதை - சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தி, உண்மையை அம்பலப்படுத்தி, சர்வதேசத்தின் கண்களைத் திறக்க வைக்கும் பெரும் பொறுப்பும், கடமையும், அந்த அவலத்தைச் சந்தித்து நிற்கும் மக்கள் மத்தியில் செயற்படுகின்ற மதத் தலைவர்களுக்கு உண்டு.

இலங்கைத் தமிழர் தாயகம் மீதான இந்தக் கொடூர ஆக்கிரமிப்புச் செயற்பாடு, கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக பௌத்த - சிங்களப் பேரினவாதப் பின்புலத்திலேயே இங்கு கட்டவிழ்கின்றது என்பது வெளிப்படை. காருண்யத்தையும், மாண்புமிக்க மனித சீலத்தையும் போதித்த பௌத்தமதத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் இந்த அழிவு, நாச வேலைகளுக்கு மத வலிமையை ஓர் ஆயுதமாகத் தென்னிலங்கை பிரயோகிக்கும்போது-

தனது உரிமை, இருப்பு, கௌரவ வாழ்வு ஆகியவற்றுக்கு எதிராகப் பேரினவாதம் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தனக்காக - தான் சார்ந்தமக்களின் மதங்களும், மதபீடங் களும் உண்மையை வெளிப்படுத்திக் குரல் எழுப்ப வேண்டும் என்று தமிழினம் உரிமையுடன் எதிர்பார்ப்பது தவறா?

மத பீடங்களுடன் அவற்றின் தலைவர்கள் கூர்ந்து கவனித்து, அவதானத்தில் எடுத்து, விரைந்து செயற்பட வேண்டிய அம்சம் இது.

இக்கட்டில் சிக்கியிருக்கும் தனது மக்களுக்காக நியாகக் குரல் எழுப்ப முடியாத சமயங்கள், சமய சந்தர்ப்பம் புரியாமல் செயற்படுபவையாகவே அர்த்தப்படுத்தப் படும்.

# மாகாண உடற்பயிற்சிப் போட்டிகளில் 3 ஆவது முறையாக சென்.அன்ரனீஸ் சம்பியன்

## ஆண்கள் பிரிவில் ஹாட்லியும் பெண்கள் பிரிவில் மானிப்பாய் மகளிரும் இரண்டாம் இடம்

வவுனியா,ஓக.24

வவுனியாவில் நடைபெற்றுவரும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில், நேற்று இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி ஆண்கள் பிரிவில் மாகாணச் சம்பியனானது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற உடற்பயிற்சி இறுதிப் போட்டியில் சென்.அன்ரனீஸ் வெற்றிபெற்றுள்ளது. இரண்டாம் இடத்துக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி தெரிவானது.

பெண்கள் பிரிவில் வவுனியா ரம்பைக்குளம் மகளிர் பாடசாலை முதலிடம் பெற்றது. இரண்டாவது இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி தட்டிச் சென்றது.

ஆண்கள் பிரிவில் சென்.அன்ரனீஸ் கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ந்து மாகாணச் சம்பியன் இடத்தைப் பிடித்து வருகின்றது. (அ-1-325)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஓக.24

ஏழாலை அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு ஏழாலை அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* ஏழாலை மயிலங்காடு ஞானகலா வி.க. எதிர் உரும்பிராய் செல்லப் பா வி.க.
* அளவெட்டி கலைவாணி வி.க. எதிர் சுன்னாகம் ஐயனார் வி.க.

* * *

வலி.வடக்கு, ஓக.24

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி, இலங்கைவங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 13 ஆவது ஆண்டாக நடத்திவரும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி வி.கவும் - சுதுமலை யுவசக்தி வி.கவும் மோதுகின்றன. (1-86)

* * *

வடமராட்சி மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டு வரும் விளையாட்டு விழாவின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் கழகமைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

மைக்கல் விளையாட்டுக்கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிலே கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் தாச்சிப் போட்டி யில் வடமராட்சி தெரிவுசெய்யப்பட்ட அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் இறுதிப் போட்டியில் வடமராட்சியின் பலம் பொருந்திய இரு அணிகளான அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (1-218)

## ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

மந்திகை,ஓக.24

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்ற 46 ஆவது ஆண்டுவிழாவும் கலைவிழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை மன்றத்தலைவர் கே.பி.ஆனந்த நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா பிரதம விருந்தினராகவும் யாழ்.மீள் எழுச்சித் திட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் வி.விஸ்வலிங்கம், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (1-218)

# சமய சந்நிதிகளில்

கோப்பாய், ஓக.24

வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்

சக்கராழ்வார் இவ்வருடம் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத்தேரில் வலம் வருவார்.

உறியடித் திருவிழா மாலை 4 மணிக்கு நடைபெறும். நாளை திங்கட் கிழமை தீர்த்த உற்சவம் காலை 9 மணிக்கு இடம் பெறும். (202-72)

* * *

யாழ்ப்பாணம், ஓக.24

கோண்டாவில் கிழக்கு நாராயணா வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு ஆன்மீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (202)

* * *

யாழ்ப்பாணம், ஓக.24

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தியை ஒட்டி இன்று முற்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். மாலை ஆறு மணிக்கு சுவாமி வீதிவலம் வருவதுடன் உறியடித் திருவிழாவும் நடைபெறும். (1)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,ஓக.24

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து உறியடி உற்சவம் நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை தீர்த்தத்திரு விழா இடம்பெறும். (203-28)

(ஆலய தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் இன்றைய உதயனின் 4 ஆம் பக்கத்தில்)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 09 | 25.08.2008<br>திங்கட்கிழமை |
| திதி:- | நவமி<br>பி.ப. 01.40வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி<br>மு.ப.9. மணி வரை |
| [illegible] | 13.05-01.35 |
| [illegible] | 07.35-09.05 |

# இயேசுவே நீர் மெசியா

இயேசு ஆண்டவர், மெசியா, இரட்சகர் என்பதை புனித பேதுரு ஏற்றுக் கொள்ளும் நிகழ்ச்சியை புனித மத்தேயு தனது நற்செய்தியில் 16.03.20 இல் விளக்குகிறார். ''மெசியா'' என்பதற்கு அர்ச்சிக்கப்பட்டவர்; அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பதாகும். அபிஷேகம் செய்யப்பட்டவர் எப்படிப்பட்டவராய் இருப்பார் என்பதை இயேசு நமக்கு லூக்கா 4:18 ஆம் வசனத்தில் எடுத்துரைத்துள்ளார்.

அபிஷேகம் செய்யப்பட்டவரின் பணிவாழ்வு என்பது

* எளியோருக்கு நற் செய்தியை அறிவிப்பது.
* சிறைப்பட்டோருக்கு விடுதலை வழங்குவது
* குருடர்கள் பார்வை பெறுவர் என அறிவிப்பது.
* ஒடுக்கப்பட்டோருக்குஉரிமைவாழ்வுவழங்குவது.




* ஆண்டவர் அருள் தருவார் என அறிவிப்பது-என்பதாகும்.

மற்றவர்கள் இயேசுவைப் பற்றி அறிந்ததையும், அவரவர் மனதில் எழுந்ததையும் கூறும்போது இயேசுவோ சீடரிடம் என்னோடு உண்டு குடித்திருக்கும் நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்றபோது, புனிதபேதுரு இயேசுவை மெசியாவாக அபிஷேகம் செய்யப்பட்டவராக, உலகத்தை எல்லாத் துன்ப, துயரங்களில் இருந்து விடுவிக்க வந்த விடுதலை வீரராக ஏற்று அறிக்கையிடுகின்றார்கள். இப்படி அறிவுடன் பதில் சொன்ன புனித பேதுருவையே தான் நிறுவிய திருச்சபைக்கு தலைவராக ஏற்படுத்தி, அத்திருச்சபையை எந்தத் தீங்கும் தீண்டாமல் இருக்குமாறு தான் பார்த்துக் கொள்வதாக வாக்குறுதி அளிக்கின்றார்.

எனவே நாமும் திருச்சபையில் அங்கம் வகிக்க விரும்பினால் அல்லது உண்மையான உறுப்பினர்களாக இரும்பினால் இயேசுவை மெசியாவாக, அபிஷேகம் செய்யப்பட்டவராக, விடுதலை வீரராக ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே தான் இன்று இயேசு நம்மிடம் சீடர்களிடம் கேட்ட அதே கேள்வியை கேட்டுக் கொண்டே இருக்கின்றார். நமது பதில் என்ன?

-நசரேன்.

# லண்டன் சட்ட நிறுவனத்தில் பதிவுபெற்ற முதல் இலங்கையர் ஐசக் தம்பையா

1913 ஒகஸ்ட் 27

லண்டனிலிருந்து திரும்பிய ஐசக் தம்பையாவுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

## நாடு திரும்பியபோது மகத்தான வரவேற்பு

திரு.ஐசக் தம்பையா யாழ்ப்பாணத்தில் உதித்த கல்விமான்களுள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருவர். சட்டத்துறையில் கல்வி பயின்ற ஐசக் தம்பையா யாழ்ப்பாண நீதிமன்றத்தில் சிறிது காலம் அப்புக்காத்தாக பணியாற்றிய பின் 1912 ஆம் ஆண்டு மேற்படிப்புக்காக இலண்டனுக்குச் சென்றார். முன்பு அப்புக்காத்து(Advocate), பிரக்கிராசி (Proctor)என்ற சொற்பதங்கள் பாவனையிலிருந்தன. தற்போது இந்தச் சொற்பதங்கள் பாவனையின்றி ஒழிந்து விட்டன. சட்டத்தரணி என்ற சொல்லே இப்போது பாவனையிலுள்ளது.

1913 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 27 ஆம் திகதி Bar-at-Lawபரீட்சையில் சித்தியடைந்து நாடு திரும்பிய ஐசக் தம்பையாவுக்கு றிட்ஜ்வே மண்டபத்தில் வைத்து வரவேற்பு அளிக்கப்பட்டது. இலண்டனிலுள்ள Incorporated Society என்ற சட்ட நிறுவனத்தில் அங்கத்துவம் வகித்த முதலாவது இலங்கையர் என்ற பெருமையையும் ஐசக் தம்பையா

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

பெற்றுள்ளார். மலேசியாவிலும் பணியாற்றிய ஐசக் தம்பையா பத்திரிகைத் துறையிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். (Ceylon Law Review, Christian Review) சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆண்டு மலர் என்பவற்றின் ஆசிரியராகவும் ஐசக் தம்பையா இருந்துள்ளார். இவரது மனைவியும் ஓர் எழுத்தாளர் என்பது குறிப்பிடத்தக்கது. ''நொருங்குண்ட இதயம்'' என்ற பிரபல தமிழ் நாவலை [illegible] மங்களநாயகம் என்ற ஆரம்பகால பெண் எழுத்தாளர் அவரது பாரியாரே.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தறப்பாளை எடுத்துச் செல்வதில் தடங்கல் பல்லாயிரக்கணக்கில் மக்கள் தொடர்ந்தும் மரநிழலில்!

வவுனியா, ஓக. 24

வன்னியில் இடம்பெயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதில் ஓமந்தையில் பெரும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கூடாரங்கள் அமைப்பதற்குரிய தறப்பாள்களை எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கு பின்னடிப்பதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இன்னமும் மர நிழல்களிலேயே வாழ்வதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் அமைப்புக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

இந்தவிடயத்தை அவை தமது தலைமையகங்களுக்கு அறிவித்துள்ளன.

வன்னிப் பகுதிக்கான ஒரேயொரு தரைவழிப் பாதையாக ஏ-9 வீதி தற்போது பாவனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஓமந்தை சோதனைச் சாவடியில் பல்வேறு நெருக்குவாரங்களை எதிர்கொள்வதாகவும் தொண்டரமைப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

குறிப்பாக அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் தற்காலிக கூடாரங்களை அமைப்பதற்கான தறப்பாள்களை எடுத்துச்செல்வதிலேயே சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. போதியளவிலில் கூடாரங்களுக்கான தறப்பாள்களை எடுத்துச் செல்ல தடங்கல்கள் ஏற்படுவதால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தொடர்ந்தும் மரங்களின் கீழேயே வாழ வேண்டியிருப் பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-01)

## வலி.வடக்கு உயர்பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பான உயர்மட்டக்குழு நேற்றுக்கூடி மேற்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது.

உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட உயர்மட்டக்குழு கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் முறையாகக் கூடியிருந்தது. மீண்டும் அந்தக் குழு நேற்றுக் கூடியது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் பலாலியில் இக்குழுநேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கூடியது.

குழுவின் உறுப்பினர்களான யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடபிராந்திய கடற்படை பிரதிக் கட்டளைத் தளபதி கொமடோர் எஸ். சமரசிங்க, யாழ். பிரதிப்பொலிஸ்மா அதிபர் ஜே.டபிள்யூ.பெர்னாண்டோ ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வலி.வடக்கில் மீள்குடியமர விருப்பம் தெரிவித்த - உயர்நீதிமன்றம் இனங்கண்ட - 3,419 குடும்பங்களை மீள் குடியமர்த்தும் வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டது.

முதற்கட்டமாக -

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் 600 மீற்றர் தொலைவில் இருந்து இடம் பெயர்ந்த 600 குடும்பங்களை உடனடியாக மீள்குடியமர அனுமதிப்பது என்று முடிவாகியுள்ளது.

முன்னரங்கில் இருந்து 600 மீற்றர் தூரத்துக்குள் இருந்து இடம்பெயர்தவர்களில் ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 233 குடும்பங்கள் மீள்குடியமர்த்த இனங்காணப்பட்டுள்ளனர் என அரச அதிபர் தெரிவித்தார்.

அவர்களை மீளக்குடியமர்த்த வசதியாக அந்தப் பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்ற படைத்தப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றிய பின்னர், படையினரின் உதவியுடன் மீளக்குடியமர விருப்பம் தெரிவித்தவர்கள் தமது காணிகளில் அடர்ந்து வளர்ந்துள்ள மரங்களை அகற்றிய பின்னர் தற்காலிக குடிசைகள் அமைத்து அவர்கள் குடியமர்வர்.

தற்காலிக குடிசைகளை அமைக்கவும் மீள் குடியமர்வுக்காக நிரந்தர நிவாரணங்களை வழங்கவும் அரச அதிபர் ஏற்பாடு செய்வார்.

வீடுகள் சேதமடையாத நிலையில் இருக்கும் பட்சத்தில் மக்கள் அந்தப் பகுதியில் உடனடியாக விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எந்தவித தாமதமும் இல்லாமல் பாதுகாப்புக்கும் குந்தகம் இல்லாத வகையில் மீள் குடியமர்வை விரைவு படுத்த க்ட்டம் கட்டமாக நடவடிக்கை எடுப்பது என்றும் குழு தீர்மானித்தது.

மீள்குடியமர்வு தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்குப் பிந்தாமல் முன்னேற்ற அறிக்கையை சமர்பிக்க வேண்டியுள்ளதால் மீண்டும் உயர்மட்டக் குழுவின் கூட்டத்தை அடுத்த மாதம் 5ஆம் திகதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(அ-1)

## யாழ்.,கிழக்கிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகங்களுக்கு 183 சிங்கள, முஸ்லிம் மாணவர்களை அனுமதித்திருந்தோம். இவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது கல்வியை தொடங்கிவிட்டார்கள் .

கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவன் ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்த மாணவர்களை தெற்குப் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்க முடிவு செய்துள்ளோம்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன் - என்று காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெற்ற சிங்கள மாணவன் ஒருவரின் தந்தை நாளை கொழும்பு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்து தமது மகனுக்கு தெற்குப் பல்கலைக்கழ கத்தில் இடம் வழங்குமாறு கோரவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். (அ-1)

## நாகர்கோயிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு கடும் மோட்டார் தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டனர்

இத் தாக்குதலில் 2 படையினர்கொல்லப்பட்டனர் மற்றும் ஒரு சிப்பாய் காயமடைந்தார் என ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (1)

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகளால் முறியடிக்கப் ப்ட்டு படைத் தரப்பினரின் மூன்று சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

துணுக்காய்ப்பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல்.4 மணியளவில் சிறிலங் கா சிறப்பு கொமாண்டோப் படையினர் முன்நகர்வுத் தாக்குதல்களை நடத்தினர்.

இத் தாக்குதலை விடுதலைப்புலிகள் முறியடித்தனர். படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

இதில் படைத்தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் ஒன்றும் படைப்பொருள்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரண்டு நாள்களின் முன்னர் வன்னேரிக்கும் அக்கராயனுக்கும் இடையில் சிறிலங்கா சிறப்பு கொமாண்டோப் படையினரின் தாக்குதல் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப் பட்டு படைத்தரப்பினரின் இரு சடலங்கள் கைப்பற்றப்பட்டன - என்றுள்ளது (அ-1)

## தேர்தல் முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான தேர்தல் வன்செயல்கள் நேற்று நடைபெற்றுள்ளன.

வாக்காளர் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்களை அபகரித்தல் ஆகிய பாரதூரமான மீறல்கள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக மேற்படி நிலையம் தெரிவித்தது.

எனினும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் எந்தத்-தரப்பினர் என்ற விவரம் கண்காணிப்பு நிலையத்தால் வெளியிடப்படவில்லை. இன்று தாம் வெளியிடும் பூரணமான அந்த விவரங்கள் உரிய முறையில் வெளியிடப்படும் என்று கண்காணிப்பு நிலையம் கூறியுள்ளது. (அ)

## முதலாவ து முடிவு...

(முதலாம் பககத் தொடர்ச்சி)

தட ால் மூல வாக்களிப்பு முடிவு முதலில் வெளியானது.

நள்ளிரவு 12 மணியளவில் வெளியான இந்த முடிவின்படி ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு 4213 வாக்குகளையும், ஐ.தே.க. 1810 வாக்குகளையும் இ.தொ.கா. 34 வாக்குகளையும் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

(அ-1)

## பெரிய அளவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது. 'பவ்ரல்', 'கபே' மற்றும் 'கண்டி மனித அபிவிருத்தி ஸ்தாபனம்' ஆகியவற்றின் கண்காணிப்பு விவரங்களின் பிரகாரம் சில வன்முறைகள் இடம்பெற்றிருந்தன எனினும் 70 சதவீ தமான வாக்களிப்பு இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வன்முறைகளும் அசம்பாவிதங்களும் பெருமளவில் நடைபெறும் என எதிர்வு கூறப்பட்டிருந்த போதிலும் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலும் சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட் டங்களிலும் சுமுகமான முறையில் தேர்தல்கள் இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை- வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு கொண்டுவரும் வாக்குப் பெட்டிகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித குணசேகர தெரிவித்துள்ளார்..

வாக்களிப்பின் போது பொதுமக்கள் பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை- தெரணியகலையில் வைத்து கைதுசெய்யப்பட்ட ஐ.தே.க வின் மேல்மாகாணசபை உறுப்பினர் ஜயந்த சில்வா உட்பட 10 பேரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதே போன்று சப்ரகமுவ மாகாண சபைக்கான ஐ.தே.கவின் வேட்பாளர் ஒருவர் உட்பட 4 பேர் கைக்குண்டுடன் கலவானை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### தோட்டத்தொழிலாளர் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை

சப்ரகமுவ மாகாணத்தில் தேர்தலில் 30 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வாக்களிக்க முடியாத நிலையில் திரும்பிச் சென்றனர்.

தேசிய அடையாளஅட்டை இல்லாத காரணத்தால் அவர்களை வாக்களிக்க தேர்தல் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. வேறு பகுதிகளிலும் இவ்வாறு வாக்காளர்கள் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரு மாகாணசபைப் பிரதேசத்திலும் படையினரும் பொலிஸாரும் பெருமளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

(அ-2-1).

Ram Communication

உங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு கடிதங்கள், பொதிகள், VCD கள் என்பவற்றை மிக குறைந்த விலையிலும் துரித சேவைகள் ஊடாக பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும். மேலும் பல சேவைகளாக I.D.D, Internet, Browsing, Typing, Laminating, E-mail, Printing, போன்ற தேவைகள் நிறைவேற்ற நாடவேண்டிய ஒரே இடம்

(Ram Communication)
E.mail- N.Ramcom @ Yahoo.Com.
Tel:- 021 222 8428
Fax:- 021 222 2007

சுடர் ஒளி
THE SUDAR OLI
ஆக.17 - 23, 2008
இப்போது விற்பனையில்
* துயர் தீருமோ?அமைதி மீளுமோ? - வன்னியில் மக்கள் அவலம்
* புலிகளின் வாலைபிடித்து ஆட்சி செலுத்தும் தெற்குத் தலைமை
* நில ஆக்கிரமிப்பு முன்நகர்வு போர் வெற்றியா? பொறியா?
* ரணிலை விழுத்த மீண்டும் சதி வலை!
* வினையை விலைக்கு வாங்கியுள்ள ஜோர்ஜியா!
* இந்தியாவில் மீண்டும் இந்து - முஸ்லிம் கலவரம்!
* நான் கண்ட பாரதி - எஸ்.டி.சிவநாயகம்
* மனிதனுக்குள் ஒரு மிருகம் - மதன்
இன்னும் வழமையான சுவையான அம்சங்களுடன்
இப்போது விற்பனையில் விலை: ரூபா 35/-

கிளை - 2
BEACON நாவலர் வீதியில் (Aero Lanka அருகில்)
A/L 2009, 2010
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - திரு.அருணன்
வணிகக்கல்வி - திரு.மகேஷ்
கணக்கீடு - திரு.பாலகஜன்
(மாலை நேர வகுப்புக்கள்)
27.08.2008 புதன் மாலை 3
Paper Class ம் பகுதி II ம்
அனைத்தும் பாடங்களிற்கும் ஆரம்பம்
Proprietor பூபாலசிங்கம்
(தவிப்பாளர் அனுமதி உண்டு)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
* Dip In Computerized Accounting (Tally, Accpack, MYOB, QuickPro)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
## இன்றும்,நாளையும் பதிவுசெய்வோருக்கு 90 % கழிவு
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

A/L 2009, 2010 இரசாயனவியல் மாணவர்களுக்கு
வெளிவந்து விட்டது
பௌதிக இரசாயனம்
கணிப்புகளும் பயிற்சிகளும் (REVISED & UPDATED)
* நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி வினாக்கள்
* க.பொ.த.(உ/த) கடந்தகால வினாக்கள் (2007 வரை)
* மிகத் திருத்தமான விடைகள்
ஆசிரியர்: க.வாணிமுகுந்தன் B.Sc.(யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)
விலை ரூ.200/=
கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை All Ceylon distributors
தொடர்புகளுக்கு: 0777172715 E-mail:muhunthan79@yahoo.com

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம்பிள்ளை கோபாலகிருஷ்ணன்

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை கோபாலகிருஷ்ணன் (சிவலிங்கம்) அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை-சிந்தாமணி தம்பதியினரின் அன்பு மகனும், பாலசிங்கம்- பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ,கிருஷ்ணபூமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசிகரன்(கட்டார்), அபிரா, கிரிதரன் (வேலணை மத்திய கல்லூரி உயர்தரம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரவணை மேற்கு,*
*வேலணை.*

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெ[illegible]னால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org